Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விலை ரூபா 10.00

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SR சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 சித்திரை 15 ஹிஜ்ரி 1427 ற:அவ்வல் 30 (28.04.2006) வெள்ளிக்கிழமை இதழ் 210

# அரசின் போர்ப்பிரகடனம்; பாராமுகமாக சர்வதேசம்!

## விடுதலைப் புலிகள் அதிர்ச்சி, கவலை

கிளிநொச்சி —

இலங்கை அரசின் பகிரங்கப் போர்ப்பிரகடனத்தையும், அரச பயங்கரவாதப் படுகொலைகளையும் சர்வதேச சமூகம் கவனத்தில் கொள்ளாதிருப்பது குறித்து விடுதலைப் புலிகள் அதிர்ச்சி வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் -

இலங்கை அரசாங்கம் கடந்த ஏப்ரல் 25 ஆம் திகதி முதல் நேரடியாக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் கவனத்தில் கொள்ளாதது எமக்கு வருத்தத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்துகிறது.

கடந்த இரு நாட்களாக அரசாங்கம் சர்வதேசத்தின் கண்காணிப்பில் உருவாக்கப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை முற்று முழுதாக பாரிய அளவில் மீறி வருகிறது.

திருகோணமலையில் மூதூர் கிழக்கில் முப்படைகளும் பாரிய தாக்குதல்களை நடத்தியதில் 12 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 26 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர். பல இலட்சம் ரூபாய் மதிப்பிலான தமிழர் சொத்துக்கள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தட்டாதெரு சந்தியில் கிரனேட் தாக்குதல்!

### சிப்பாய் பலி, ஒருவர் காயம்

யாழ்ப்பாணம் —

யாழ்.தட்டாதெருச் சந்தியில் படையினரின் காவலரண் மீது நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் பலியானதுடன், இன்னொருவர் படுகாயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மாலை 5.30 மணியளவில் தட்டாதெருச்சந்தியிலுள்ள காவலரணில் கடமையில் இருந்த படையினர் மீது அடையாளம் தெரியாத நபர்களால் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் தட்டுப்பாடு இன்று முதல் நீங்கும்!

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டுக்கான பெற்றோல் மற்றும் ஏனைய எரிபொருட்களின் விநியோகம் இன்றுடன் சீராகும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக கூட்டுத்தாபன வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கையில்-

தமிழ் - சிங்கள புதுவருடக் கொண்டாட்டங்களுக்காக ஊழியர் கள் தமது இடங்களுக்குச் சென்றதன் காரணமாக குடாநாட்டில் எரிபொருள் விநியோகம் ஓரளவு பாதிக்கப்பட்டிருந்தது. இதனால், எரிபொருள் விற் பனை நிலையங்களிலும் எரிபொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவியது.

பின்னர் கடந்த செவ்வாய்க் கிழமை ஏ9 வீதி திடீரென மூடப்பட் டதால் தென் பகுதியில் இருந்து குடாநாட்டுக்கான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சரத் பொன்சேகாவுக்கு

## திருகோணமலைத் தாக்குதல் அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல்

### கண்காணிப்புக் குழுத் தலைவர்



திருகோணமலை —

திருகோணமலை மாவட்டம், மூதூர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளில் நடத்தப்பட்ட வான் தாக்குதல் மற்றும் ஆட்லறி, ஷெல் தாக்குதல்கள் அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல் என்று இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் நேற்று மூதூரில் வைத்து கூறினார்.

நேற்று மூதூர் பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிச ளுக்கு நேரில் சென்ற இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் விமான குண்டுவீச்சு மற்றும் ஆட்லறி தாக்குதல்கள், பல்குழல் ஷெல் தாக்குதல்களில் மிகமோசமாக

# எரிபொருள் தட்டுப்பாடு இன்று முதல் நீங்கும்!

யாழ்ப்பாணம்

யாழ்.குடாநாட்டுக்கான பெற்றோல் மற்றும் ஏனைய எரிபொருட்களின் விநியோகம் இன்றுடன் சீராகும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக கூட்டுத்தாபன வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கையில்-

தமிழ் - சிங்கள புதுவருடக் கொண்டாட்டங்களுக்காக ஊழியர் கள் தமது இடங்களுக்குச் சென்றதன் காரணமாக குடாநாட்டில் எரிபொருள் விநியோகம் ஓரளவு பாதிக்கப்பட்டிருந்தது. இதனால், எரிபொருள் விற் பனை நிலையங்களிலும் எரிபொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவியது.

பின்னர் கடந்த செவ்வாய்க் கிழமை ஏ9 வீதி திடீரென மூடப்பட் டதால் தென் பகுதியில் இருந்து குடாநாட்டுக்கான (12 ஆம் பக்கம் பார்க்க)

# சரத் பொன்சேகாவுக்கு சுயநினைவு திரும்பியது!

கொழும்பு

தற்கொலைக் குண்டுத் தாக்குதலின்போது படுகாயமடைந்த இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகாவின் உடல்நிலை வேகமாக முன்னேற்றமடைந்து வருவதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விபத்து சேவைப் பிரிவைச் சேர்ந்த டொக்டர் அனில் ஜெயசிங்க தெரிவித்தார்

குண்டுத் தாக்குலில் படுகாயமுற்றிருந்த சரத் பொன்சேகாவுக்கு மீளவும் சுயநினைவு திரும்பி இருப்பதாகவும்,இவரது உயிரைக் காப்பாற்றுவதற்காக பொருத்தப்பட்டிருந்த கருவிகள் இன்று அகற்றப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தலை, நெஞ்சு, வயிற்றுப் பகுதிகளில் படுகாயமடைந்திருந்த சரத் பொன்சேகாவுக்கு 10 விசேட வைத்திய நிபுணர்கள் உள்ளிட்ட 20 பேர் கொண்ட மருத்துவர் குழுவினர் 3 மணிநேரமாக - 3 சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலைத் தாக்குதல அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல்

## கண்காணிப்புக் குழூத் தலைவர்



திருகோணமலை

திருகோணமலை மாவட்டம், மூதூர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் மீது செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளில் நடத்தப்பட்ட வான் தாக்குதல் மற்றும் ஆட்லறி, ஷெல் தாக்குதல்கள் அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல் என்று இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் நேற்று மூதூரில் வைத்து கூறினார்.

நேற்று மூதூர் பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிச ளுக்கு நேரில் சென்ற இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்'ுக்குழுத் தலைவர் விமான குண்டுவீச்சு மற்றும் ஆட்லறி த'.க்குதல்கள், பல்குழல் ஷெல் தாக்குதல்களில் மிகமோசமாச ு பாதிக்கப்பட்ட மூதூர் கிழக்கு, (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஊர்காவற்துறையில் கிளைமோருக்கு 2 கடற்படையினர் பலி

யாழ்ப்பாணம்

ஊர்காவற்துறை - செருக்கன் சந்தியில் கடற்படையினர் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை 10 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

புங்குடுதீவிலுள்ள கடற்படையினர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் இரு தாக்குதல்கள்; 3 படையினர் பலி, 5 பேர் காயம்!

மன்னார்

மன்னாரில் நேற்று நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதல்களில் மூன்று படையினர் பலியாகினர். மேலும் 5 பேர் படுகாயமடைந்தனர்.

மன்னார் - மதவாச்சி வீதியில் முருங்கன் 12 ஆம் கட்டைப்பகுதியில் நேற்றுக் காலை 9.20 மணியளவில் விசேட அதிரடிப்படையினர் பயணித்த பவள் கவச வாகனம் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இரண்டு அதிரடிப்படையினர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் எச்.எம்.ஹேரத் (வயது 35), டபிள்யூ.ஏ.எஸ்.பி.சஞ்சீவ் (வயது 30) ஆகிய இருவருமே படுகாயமடைந்து முருங்கன் வைத்தியசாலையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# தளபதிகளின் பயணத்துக்கு எயார் லங்கா சீ பிளேன்?

## அரசு புதிய ஆலோசனையாம்

கொழும்பு

புலிகளின் கிழக்குப் பிராந்திய தளபதிகளின் கிளிநொச்சிப் பயணத்துக்கு எயர் லங்கா கடல் விமானத்தை ஏற்பாடு செய்துதர இலங்கை அரசு முன்வந்துள்ளதாக சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது-

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும், நோர்வே பிரதிநிதிகளுக்கும் இடையில் கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பில் - எயார் லங்கா கடல் விமானத்தை ஏற்பாடு செய்யும் யோசனை முன்வைக்கப்பட்டது.

அரசாங்கத்தின் இந்த யோசனை குறித்து விடுதலைப் புலிகளுக்குத் தெரிவிப்பதற்காக நோர்வே விசேடகுழுவினர் கிளிநொச்சி பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

அரசாங்கத்தின் கடல் விமானம் யோசனையை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளக் கூடும் என்று அரசு எதிர்பார்ப்பதாக கூறப்படுகிறது. இருப்பினும், (12 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய,இணைத்தலைமை தூ,நர்கள் ஜனாதிபதி மகிந்தவுடன் ஆலோசனை

கொழும்பு

தற்போதைய நெருக்கடி நிலைமை தொடர்பாக இணைத் தலைமை நாடுகளின் தூதுவர்களும், இந்தியத் தூதுவரும் நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் ஜூலியன், நெதர்லாந்து தூதுவர் ஹென்றிக் வன் டிஜ்க், நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், ஜப்பானியத் தூதுவர் அக்கியோ சூடா, அமெரிக்க தூதரக அதிகாரி ஜேம்ஸ் எண்ட்விஸ்டில் மற்றும் இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் ஆகியோரை ஜனாதிபதி மகிந்த (12 ஆம் பக்கம் பார்க்க)



# போதனா வைத்தியசாலையில் குருதி வகைகளுக்கு தடுப்பாடு!

யாழ்ப்பாணம் —

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனைத்து வகை குருதிகளுக்கும் பற்றாக்குறை நிலவுவதாக இரத்த வங்கி வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமை காரணமாக குருதிக் கொடையாளர்களின் வருகை குறைவடைந்துள்ளதால், ஏற்பட்டிருக்கும் குருதிப்பற்றாக்குறையை நீக்குவதற்கு குருதிக்கொடையாளர்களை உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# சாரதி அனுமதிப் பத்திரத்துக்கு விண்ணப்பித்தவர்களுக்கு!

யாழ்ப்பாணம் —

சாரதி அனுமதிப் பத்திரத்தின் இணைப் பிரதி பெறுதல், சாரதி அனுமதிப்பத்திரத்தை புதுப்பித்தல், சாரதி அனுமதிப்பத்திர புத்தகங்களை கணினி மயப்படுத்தப்பட்ட அட்டைகளாக மாற்றுதல் ஆகியவற்றுக்கு விண்ணப்பித்து ஒரு வருடத்துக்கு மேலாகியும் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தாம் விண்ணப்பித்த பிரதேச செயலகங்கள் அல்லது உதவி அரசாங்க அதிபர் பணிமனையுடன் உடன் நேரில் தொடர்பு கொண்டு உரிய விபரங்களை சமர்ப்பிக்கு மாறு யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் தெரிவித்தார்.

# செஞ்சிலுவைச்சங்கம் சைக்கிள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம் —

டெனிஸ் செஞ்சிலுவைச் சங்கம் யாழ்.மாவட்டத்திலுள்ள இலங்கை செஞ்சிலுவை சங்க அலுவலக பாவனைக்கென துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - பிரிவுத் தலைவர்கள் அல்லது செயலாளர்கள் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களைக் கலந்துகொள்ளுமாறு செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளைத்தலைவர் வி. கே.கணேசலிங்கம் தெரிவித்தார்.

# ஊடகவியலாளர் சிவராமின் ஞாபகார்த்த நிகழ்வு இன்று!

யாழ்ப்பாணம் —

ஊடகவியலாளர் மாமனிதர் டி. சிவராமின் ஓராண்டு ஞாபகார்த்த நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு ஜும்மா பள்ளிவாசல் வீதியில் உள்ள ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்தில் வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கத் தலைவர் சி.கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறவுள் ளது.

இந்த நிகழ்வில் அனைத்து ஊடகவியலாளர்களையும் கலந்து கொள்ளுமாறு டி.சிவராம் ஞாபகார்த்த ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர்.

## இலங்கை வங்கியில் அடகு நகைகள் ஏலம்!

யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்ட இலங்கை வங்கிக் கிளைகளில் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வு யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கி மேற்தரக் கிளையில் நாளையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(110)


நாதன்ஸ் யாழ்ப்பாணம்
எஸ்.ஜே.சூர்யா, நயன்தாரா, விவேக் நடித்த

கள்வனின் காதலி
கா.நே : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின அதிரடி வெளியீடு
அஜித்குமார், சதா மற்றும் பலர் நடித்த
திருப்பதி

இரண்டாவது வெற்றி வாரம்
காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

ராஜா யாழ்ப்பாணம்
புதுவருட வெளியீடு
பரத், மல்லிகா கபூர் மற்றும் பலர் நடித்த

அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
ப.நேரம் : 10.30,2.30,6.30,9.30

DAIDO Mopet

48CC
Koyo ரேசர்கள்
DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO


ஏகமுகவர்
செலிடிப் மோட்டர் என்டர்பிறைஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10.
தொலைபேசி : 011-2341560-1, 2438779,
பக்ஸ் 011-2454608
E.mail: zme@slt.lk

நிறைஞ்சனாஸ் சங்கானை
ரஜனிகாந், றோஜா மற்றும் பலர் நடித்த
உழைப்பாளி
கா.நே : (பு.நே) 10.30, 2.15, 5.30


# கண்ணீர் அஞ்சலி



யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி ஊழியரான
தங்கராசா கமலலோஜன்
அவர்கள் 25.04.2006 அன்று அகாலமரணமடைந்துள்ளார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி சமூகம் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தங்கராசா கமலலோஜன்**

(2251)

தொழில்நுட்பக் கல்லூரி சமூகம்.

## தபால் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சு

## தேசிய போட்டிக் கூறுவிலை கோரல்

## கிளிநொச்சி பிரதம தபாலக நிர்மாண வேலை கட்டம் - I

# கேள்வி அறிவித்தல்

இல :- கேஎன்/டிபிஎஸ்/எம்பிரியுடி /கேஎன்பிஓ/07/06 27.04.2006

1. கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைக்கான ஒப்பந்தத்தின் கீழ் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.
2. அரசாங்க அதிபர் கிளிநொச்சி அவர்களால் மூடிய கேள்விகள் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.
3. கீழே குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகவோ அல்லது கிளிநொச்சியில் மாற்றத்தக்கதான, அரசாங்க அதிபர், கிளிநொச்சி என்ற பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி பிணையாகவோ (DRAFT) சமர்ப்பிப்பதன் பெயரில் கிளிநொச்சி கச்சேரியில் அமைந்துள்ள மாவட்ட திட்டமிடல் செயலகத்தில் 10.05.2006 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை மாவட்டத் திட்டமிடல் செயலகம், மாவட்ட செயலகம், கிளிநொச்சியில் இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
5. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் கேள்வி திறக்கப்படும் தினத்தில் இருந்து 90 நாட்களுக்குள் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், அரசாங்க அதிபர், கிளிநொச்சி என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு 11.05.2006 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
கேள்விச் சபை,
மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி.

அதே தினம் பிற்பகல் 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிடப்பட்ட திகதியில் காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கடுத்த வேலை நாளன்று அதே இடத்தில், அதே நேரத்தில் கோரல்கள்பெறப்பட்டு திறக்கப்படும்.

6. வேறு விபரங்களை கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

| கேள்விக் குறியீட்டு இல | வேலை விபரம் | கேள்விப் பிணை | மீளளிக்கப்படாத கேள்விப் பணம் | வேலை நிறைவேற்ற வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| கேஎன்/டிபிஎஸ்/எம்பிரியுடி/கேஎன்பிஓ/07/06 | கிளிநொச்சி பிரதம தபாலக நிர்மாண வேலை கட்டம் - I | 64,000/= | 1000/= | ஆறு மாதங்கள் |

7. கேள்விதாரர்கள், கேள்விதாரர்களுக்குரிய ஆகக்குறைந்த தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் இந்தக் கேள்வி விளம்பரத்தில் உள்ள ஒப்பந்தத்தினை வழங்கும்போது கேள்விதாரர் இவ் வேலையினை நிறைவேற்றுவதற்குரிய வளமும், ஆளணியும், அனுபவமும் இருப்பது ஒரு தனி ஒப்பந்தத்துக்குரிய தகைமையைத் திருப்திப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி.

[C/5289]

# புலிகளுடன் போர்நிறுத்தத்தை கடைப்பிடிக்க தேவையில்லை!

## ஜே.வி.பி. தெரிவிப்பு

கொழும்பு—

விடுதலைப் புலிகளுடனான போர்நிறுத்த ஒப்பந்தத்தை அரசாங்கம் இனியும் கடைப்பிடிக்கவேண்டிய தேவையில்லையென ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:-

யுத்தநிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இல்லாத நிலையில் விடுதலைப் புலிகள் பல. மாதங்களாகச் செயற்பட்டுவந்தனர்.

அரசாங்கம் இனியும் ஒருதலைப் பட்ச யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் தொங்கிக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

இராணுவத் தளபதிமீது கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலை அரசாங்கமோ, பொதுமக்களோ இலகுவாக எடுத்துக்கொள்ள முடியாது.

பேச்சுக்கள்மூலம் அமைதியை எட்டமுடியும் என்ற நாகரிக வழி இருக்கின்றபோதும் விடுதலைப் புலிகள் நீண்டகாலம் அமைதிப் பேச்சுக்களில் ஈடுபடமாட்டார்கள் என்ற உண்மையை அரசாங்கமும், மக்களும் ஒப்புக்கொள்ளவேண்டும்.

எம்மிடம் உள்ள அனைத்து வேறுபாடுகளையும் மறந்து மிலேச்சத்தனமான பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க ஒன்றிணையவேண்டிய தருணம் இது. எமது நாட்டின் பிரச்சினைக்கு சர்வதேச சமூகம் தீர்வு காணமுடியாது என்ற உண்மையை ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

அரசாங்கம் நெகிழ்வுத் தன்மையைக் கடைப்பிடித்தது போதும். விடுதலைப் புலிகளைப் பேச்சு மேமைசக்குக் கொண்டுவர நோர்வே தவறிவிட்டது. தனது அனுசரணைப் பணியில் நோர்வே தோல்வியடைந்துவிட்டது. ஒரு முக்கியமான



காலகட்டத்தில் செயற்பட நோர்வே தவறிவிட்டது. எனவே, அனுசரணையாளராக நோர்வே இருக்கத் தேவையில்லை.

இத்தகைய நிலையில் அரசாங்கத்துக்கு எதுவித நிபந்தனையுமற்ற ஆதரவை ஜே.வி.பி. அளிக்கிறது.

இராணுவத்தினர்மீதும், பொதுமக்கள்மீதும் விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் தாக்குதல் நடத்திவருவதையடுத்து சிங்கள மற்றும் தமிழ் மக்களிடையே பிளவை உருவாக்கும் புலிகளின் உத்திக்கு மக்கள் இணங்கிவிட வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## சர்வகட்சி மாநாடு

கொழும்பு—

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாகவும், ஜெனீவா பேச்சுக்கள் ஒத்திவைக்கப்படும் நிலை தொடர்பாகவும் கலந்தாலோசனை நடத்துவதற்காக இன்று சர்வகட்சி மாநாட்டுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் இன்று மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ள இந்த அனைத்துக் கட்சி கூட்டத்தில் பாதுகாப்பு தலைமை அதிகாரிகள் மற்றும் முக்கிய அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## சயனைட் அருந்திய இளைஞர் மரணம்

கொழும்பு—

பொலனறுவ - கதுருவெலவில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட போது சயனைட் அருந்தியநிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்ததாக கொழும்பு தேசிய வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கதுருவெலவில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் நடவடிக்கைகளை உளவு பார்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது சந்தேகத்தின் பேரில் இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் ஒருவர் சயனைட் அருந்திய நிலையில் பொலனறு வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்திய சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

எனினும் அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## திருமலைக்கு விரைந்தார் கண்காணிப்புக்குழு தலைவர்



கொழும்பு—

பாதுகாப்பு நிலைமை தொடர்பாக நேரில் மதிப்பீடுசெய்ய போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் நேற்றுமுன்தினம் திருகோணமலைக்கு விஜயம் செய்தார்.

தமிழர் தாயகப் பகுதிகளில் முப்படைகளும் நடத்திய தாக்குதல் ஒரு ஆத்திரமூட்டும் நடவடிக்கை என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் - தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாக கிளிநொச்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதலையடுத்து தாக்குதல் நடந்த பகுதிக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிடுமாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரை விடுதலைப் புலிகள் வலியுறுத்தியுள்ளதாகவும் தெரிகிறது.

மூதூர் கிழக்கில் தாக்குதலை நடத்தும் அரசாங்கம், பொய்யான தகவல்களை பரப்பிவருவதாகவும் புலிகள் தரப்பில் கூறப்பட்டது. திருகோணமலை பகுதியில் தொடரும் தாக்குதல்கள் தொடர்பாக நேரில் ஆய்வுசெய்ய வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் கேட்டுக்கொண்டனர். இதனையடுத்து ஹென்றிக்சன் நேற்றுமுன்தினம் அங்குசென்றார்.

திருகோணமலை நிலைமைகளை அவதானித்த பின்னர் கிளிநொச்சிக்கும் அவர் பயணம் மேற்கொண்டு நிலைமைகளை விடுதலைப் புலிகளிடம் தெரிவிக்கவிருப்பதாகவும் தெரியவருகிறது.

# போர்நிறுத்த உடன்பாட்டிலிருந்து இருதரப்பும் விலகவில்லை!

## கண்காணிப்புக்குழு பேச்சாளர் தெரிவிப்பு



கொழும்பு—

அரசாங்கமும் - விடுதலைப் புலிகளும் போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து இதுவரை முழுமையாக விலகிச்செல்லவில்லை என போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவின் பேச்சாளர் ஹெலன் ஓலப்ஸ் டோட்ரயர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

ஜெனீவா பேச்சுவார்த்தை தொடர்பான நிலைப்பாடு இதுவரை இருதரப்பினராலும் கைவிடப்படவில்லை. ஆயினும் இருதரப்பினரும் கடந்த நாட்களில் தாக்குதல்களில் ஈடுபட்டிருப்பதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

கடந்த காலங்களில் வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றபோதிலும், தற்போது நிலைமை மிகவும் மோசமான கட்டத்தை அடைந்திருக்கிறது.

எனினும், ஜெனீவாவில் நடைபெறவுள்ள இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தையிலிருந்து விலகிகொள்வதாக இரு தரப்பினரும் அறிவிக்கவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளையும், அரசாங்கத்தரப்பினரையும் பேச்சுவார்த்தைக்கு அழைத்து வர சர்வதேச தலையீடு அவசியம். கொழும்பில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலை அடுத்து இரண்டு தரப்புக்கும் இடையில் பாரிய முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இரண்டு தரப்புக்கும் இடையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியும் என்ற ஓரளவு நம்பிக்கை இருக்கிறது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற குண்டுத் தாக்குதலை அடுத்து இலங்கையில் தங்கியுள்ள நோர்வேயின் சமாதான தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர், அரசாங்க தரப்புடன் பேச்சுக்களை நடத்தியுள்ளதாக நோர்வே தூதரக பேச்சாளர் எரிக் நியூன்பேக் தெரிவித்தார். எனினும், யாருடன் பேச்சு நடத்தினார் என்ற விடயத்தை அவர் வெளியிடவில்லை.

அத்துடன் பௌயர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தரப்புடன் பேச்சு நடத்தியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும், அது தொடர்பான தகவல்களை பெறமுடியவில்லை. இந்த பேச்சுவார்த்தைகளின் பின்னர் ஹன்சன் பௌயர் நோர்வே திரும்பவுள்ளதாக தூதரகப் பேச்சாளர் எரிக் நியூன்பேக் தெரிவித்தார்.

## கதிர்காமர் கொலை வழக்கின் சந்தேக நபருக்கு பிணை அனுமதி!

கொழும்பு—

முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் கொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட தமிழர் ஒருவருக்கு பிணையில் செல்ல அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

கதிர்காமரின் கொலையுடன் தொடர்புடைய கொலையாளிகளுக்கு செல்லிடப்பேசி வழங்கியதாகத் தெரிவித்து சந்தேகத்தின்பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட காளிமுத்து திருக்குமார் என்பவரே பிணையில் செல்ல அனுமதியளிக்கப்பட்டார்.

எனினும் தனது கணவருக்கும், கதிர்காமரின் கொலைக்கும் எந்தவித தொடர்பும் இல்லையெனவும்-

எனவே, அவரைப் பிணையில் விடுதலை செய்யவேண்டும் எனவும் கோரி மனைவி நந்தினி நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இவரின் மனுவை விசாரணை செய்த நீதிபதி திபாலி விஜயசுந்தர - கடும் நிபந்தனைகளுடன் கூடிய பிணையை அவருக்கு அளித்தார்.

# மட்டுப்படுத்தப்பட்ட படை நடவடிக்கை முடிவடைந்ததாக அரசாங்கம் தெரிவிப்பு!

கொழும்பு—

இராணுவத் தளபதியை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலுக்குப் பதில் நடவடிக்கையாக திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிமீது மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக, அரசாங்கம் நோர்வேயின் விசேட தூதுவர் ஹன்சன் பௌயரிடம் தெரிவித்துள்ளது.

இந்த மட்டுப்படுத்தப்பட்ட படை நடவடிக்கை நேற்றுமுன்தினம் புதன் கிழமையுடன் நிறுத்தப்பட்டதாகவும் அரசாங்கம் பௌயரிடம் தெரிவித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஜெனிவாவில் இரண்டாம்கட்டப் பேச்சுக்களை நடத்துவது தொடர்பாகவும், விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண தளபதிகளின் பயண ஒழுங்கு தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காகவும் கடந்த வாரம் இலங்கை வந்த நோர்வேயின் விசேட தூதுவர் ஹன்சன் பௌயர் நேற்றுமுன்தினம் புதன் கிழமை நாடுதிரும்பினார்.

மேற்படி முயற்சிகளில் தீர்வு காணப்படாத நிலையில் தனது பயண ஒழுங்கில் மாற்றத்தைச் செய்த அவர் கொழும்பில் தங்கியிருந்து அரச பிரதிநிதிகளைச் சந்தித்தார்.

இந்த நிலையில் அவர் நேற்று முன்தினம் நோர்வே திரும்பினார்.

## சந்தேக நபர்களுக்கு விளக்க மறியல் நீடிப்பு!

கொழும்பு—

வெடிபொருட்களை படகில் ஏற்றினார்கள் எனத் தெரிவித்து கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட ஐந்து விடுதலைப் புலி சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை நடத்த பயங்கரவாத தடுப்புப் பிரிவினருக்கு கொழும்பு தலைமை நீதிபதி குசல சரோஜினி வீரவர்த்தன உத்தரவிட்டார்.

அருணாசலம் டேவிட், வீரசிங்கம் மனோகரன், சீனன்குடாவைச் சேர்ந்த முத்துவெளி சிறீஸ்கந்தராஜா, மன்னார் அப்புலோகப்பரா, கஞக்குடாவைச் சேர்ந்த பொடி அப்பு சுபசேனா ஆகியோர் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

நடுக்கடலில் படகு ஒன்றில் வெடிபொருட்களை ஏற்றிக்கொண்டிருந்ததாகவும், அந்தப் படகைக் கடற்படையினர் நெருங்கியபோது 5 பேரும் படகை கடலில் மூழ்கடித்ததாகவும், டோராப் படகான பி-473 இன் கட்டளை அதிகாரி ஜயந்த கீத்சிறீ முறைப்பாடு செய்திருந்தார். இதையடுத்து பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் பேரில் 5 பேரும் கைதுசெய்யப்பட்டனர்.

அதன் பின்னர் விளக்கமறியல் நீடிப்புக்காக நீதிமன்றிடம் அனுமதி கோரப்பட்டது. அதை ஏற்று நீதிமன்றில் எதிர்வரும் மே 19 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிப்பு செய்ய உத்தரவிட்டார்.

## திருமலையில் முஸ்லிம்கள் கொலை முஸ்லிம் காங்கிரஸ் கண்டனம்!

திருகோணமலை—

திருகோணமலையில் விமானப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட குண்டுவீச்சில் முஸ்லிம்கள் படுகொலைசெய்யப்பட்டமைக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

வட்டம் மற்றும் தக்வா நகரப் பிரதேசங்களில் நடத்தப்பட்ட முப்படையினரின் தாக்குதலில் பல முஸ்லிம் கிராமமக்கள் படுகாயமடைந்ததுடன், மூவர் படுகொலை செய்யப்பட்டனர்.


சர்ச்சைக்குரிய தமிழீழ விடுதலைப்புலிகளின் பயண ஒழுங்கு விவகாரமானது தேவையற்ற பதற்றத்தை உருவாக்கியுள்ளது. இருதரப்பினது ஆத்திரமூட்டும் அறிக்கைகள் இப்போது குண்டுவெடிப்புச் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

நிலையான அமைதி முயற்சிகள் என்பது இருதரப்பினரும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருதால் மட்டுமே அல்ல - முஸ்லிம்களையும் தனித்தரப்பாக அங்கீகரித்து அமைதி முயற்சிகளில் இணைத்துக் கொள்ள வேண்டும்.

இராணுவத் தளபதியின் வாகனம் மீதான தாக்குதலை முஸ்லிம் காங்கிரஸ் வன்மையாகக் கண்டனம் செய்கிறது.

விமானப் படையின் குண்டுத் தாக்குதல்களில் பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதற்கும், படுகொலை செய்யப்பட்டிருப்பதற்கும் எமது கவலையை தெரிவித்துக்கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரண்டாவது ஒருநாள் போட்டியிலும் வெற்றிபெற்றது அவுஸ்ரேலிய அணி



பதுல்லா —

அவுஸ்ரேலிய - பங்களாதேஷ் அணிகளுக்கிடையே நேற்றுமுன்தினம் பதுல்லாவில் நடைபெற்ற இரண்டாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 67 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கியது. அந்த அணியின் கில்கிறிஸ்ட்டும், கடிச்சும் தொடக்க ஆட்டக்காரர்களாகக் களமிறங்கினர்.

கில்கிறிஸ்ட் அதிரடியாக ஆடி 4 பவுண்டரிகள், 1 சிக்ஸர் அடங்கலாக 32 ஓட்டங்களைப் பெற்று மொட்ராசாவின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய பொண்டிங் 5 ஓட்டங்களை மட்டும் பெற்று மொட்ராசாவின் பந்தில் போல்டானார்.

அவரையடுத்து மைக்கல் கிளார்க் களமிறங்க, கடிச் 26 ஓட்டங்களைப் பெற்று மொட்ராசா வீசிய பந்தை, சாரியர் நபீஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து கிளார்க்குடன் இணைந்துகொண்ட சைமன்ஸ் சிறப்பாக ஆடினார். இந்த ஜோடி நான்காவது விக்கெட்டுக்காக 140 ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை, 54 ஓட்டங்களைப் பெற்றிருந்த மைக்கல் கிளார்க், ரபீக் வீசிய பந்தை அலோக் கபாலியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியாக களமிறங்கிய ஹூசே 18 ஓட்டங்களைப் பெற்று - அப்துர் ரசாக் வீசிய இறுதி ஓவரின் கடைசிப் பந்தில் ஆட்டமிழந்தார்.

அவுஸ்ரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிறப்பாக ஆடி 6 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 103 ஓட்டங்களைப் பெற்ற சைமன்ஸ் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார்.



பந்துவீச்சில் மொட்ராசா 3, ரசாக், ரபீக் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து 251 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது.



அணி ஓட்டமெதையும் பெறாத நிலையிலேயே நபீஸ் - லீ வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து ஜாவிட் ஒமர் களமிறங்க, ஓட்டமெதையும் பெறாதிருந்த ரஜின் சாலே, பிறக்கன் வீசிய பந்தை கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து களமிறங்கிய இம்ரான் 2 ஓட்டங்களை மட்டும் பெற்று பிறக்கனின் பந்தில் ஆட்டமிழந்தார்.

8 ஓட்டங்களைப் பெறுவதற்குள் 3 முக்கிய விக்கெட்டுக்களை இழந்து பங்களாதேஷ் அணி திணறியது.

இந்தநிலையில் ஹபிபுல் பசார், ஜாவிட் ஒமருடன் இணைந்தார். இவர்கள் இருவரும் ஆடியவேளை, 34 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஒமர், ஹூசேயின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய காலித் மசூத் 36 ஓட்டங்களைப் பெற்று மைக்கல் கிளார்க்கின் பந்தில் போல்டானார்.

அவரையடுத்து அலோக் கபாலி களமிறங்க, 6 பவுண்டரிகள் அடங்கலாக 70 ஓட்டங்களைப் பெற்றிருந்த பசாரும், கிளார்க்கின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ரபீக் 0, கபாலி 10, மொட்ராசா 15, ரசாக் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இதனால் 48 ஓவர்களில் பங்களாதேஷ் அணி 183 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்ததால், 67 ஓட்டங்களால் அவுஸ்ரேலிய அணி வெற்றிபெற்றது.

ஹூசேன் 1 ஓட்டத்தைப் பெற்று இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் ஹொக் 3, லீ, பிறக்கன், கிளார்க் மூவரும் தலா 2, ஹூசே ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

## உதைபந்தாட்டப் போட்டி

நெல்லியடி —

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் இன்றைய ஆட்டங்களாக மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சிவானந்தா விளையாட்டுக் கழகமும் -

மாலை 4.30 மணிக்கு கருணாகரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலைமதி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

# விளையாட்டு

## மக்ராவின் பந்துவீச்சை எதிர்கொள்வது கடினம்

### வீரேந்தர் ஷேவாக் தெரிவிப்பு



லூதியானா —

இந்திய கிரிக்கெட் வீரர் ஷேவாக் ஹோட்டல் தொழிலில் இறங்கியிருக்கிறார். அவர் புதுடெல்கி மற்றும் பஞ்சாப் மாநிலம் லூதியானாவில் ஹோட்டல்களைத் தொடங்கியுள்ளார். அடுத்ததாக அலகாபாத், ஜெய்ப்பூரிலும் தொடங்க திட்டமிட்டுள்ளார்.

தொழில் தொடர்பாக லூதியானா வந்திருந்த அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு -

இந்திய அணியில் டோனியைப் போன்ற பல வீரர்கள் இன்போது சிறந்த வீரர்களாக உருவெடுத்து வருகிறார்கள். இதனால் இந்திய அணி பலமான அணியாக மாறியிருக்கிறது. வெற்றிபெறும் அணி என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

என்னைப் பொறுத்தவரை உலகிலேயே சிறந்த பந்துவீச்சாளராக அவுஸ்ரேலியாவின் மக்ராவையே கருதுகிறேன். எனது கிரிக்கெட் வாழ்க்கையில் எத்தனையோ பந்துவீச்சாளர்களைச் சந்தித்திருக்கிறேன். மக்ராவின் பந்துவீச்சுத்தான் சந்திப்பதற்கு கடினமாக இருக்கும். மிக நுணுக்கமாக அவர் பந்துவீசி நெருக்கடி கொடுப்பார் என ஷேவாக் கூறினார்.

## ரொட்ஸின் நியமனத்துக்கு மியான்டட் கடும் எதிர்ப்பு



இஸ்லாமாபாத் —

பாகிஸ்தான் அணிக்கு களத்தடுப்பு ஆலோசகராக தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் ஜொன்டி ரொட்ஸை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நியமித்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் ஜாவிட் மியான்டட்.

ரொட்ஸை களத்தடுப்பு ஆலோசகராக நியமனம் செய்யவேண்டுமென்ற எண்ணம் எங்கிருந்து வந்தது எனத் தெரியவில்லை. குறைந்த காலமே அவர் அந்தப் பணிக்கு ஒத்துக்கொண்டுள்ளார். அதில் என்ன மாற்றத்தைச் செய்யப்போகிறார் என எனக்குத் தெரியவில்லை. நிச்சயம் நல்ல பணத்துக்கு கிடைத்த கேடுதான் அந்தச் செயல்.

அணியின் களத்தடுப்பில் ஏன் சீரற்ற தன்மை இருக்கிறது என்பதை கிரிக்கெட் சபைக்கு சொல்ல நினைக்கிறேன். களத்தடுப்பு என்கிறபோது, வீரர்கள் தாமாக முன்வந்து அதில் திறமையை வெளிப்படுத்த முயற்சி செய்யவேண்டும்.

டைவ் அடித்து களத்தடுப்பு செய்ய யாரும் வீரரை நிர்ப்பந்திக்க முடியாது. அதைச் செய்யவேண்டும் என்ற மனப்பான்மை தானாகவே வர வேண்டும் என பாகிஸ்தானிலிருந்து வெளிவரும் தி நியூஸ் பத்திரிகையில் குறிப்பிட்டுள்ளார் மியான்டட்.

## சமநிலையில் முடிவுற்ற 3 நாள் பயிற்சி ஆட்டம்



லண்டன் —

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள இலங்கை அணிக்கும், இங்கிலாந்து பல்கலைக்கழகங்கள் அணிக்குமிடையிலான 3 நாள் பயிற்சி ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து பல்கலைக்கழகங்கள் அணி - இலங்கை அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தது.

இதன்படி இலங்கை அணி தனது முதல் இனிங்ஸில் 289 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் தரங்க 100 ஓட்டங்களைப் பெற்றார்.



இதில் சமரவீர 114, ஜெயவர்த்தன 52, கப்புகெதர 49 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் பிராத்வெய்ட், றிச்சார்ட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

தொடர்ந்து ஆடி இங்கிலாந்து பல்கலைக்கழகங்கள் அணி தனது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 125 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

பந்துவீச்சில் சமிந்தவாஸ், சொய்சா ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

அடுத்து இலங்கை அணி தனது இரண்டாவது இனிங்ஸில் ஆடி 256 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்து ஆட்டத்தை டிக்ளேர் செய்தது.

பந்துவீச்சில் பல்கொம்பே 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

தொடர்ந்து இறுதி நாளான நேற்று ஆடிய இங்கிலாந்து பல்கலைக்கழகங்கள் அணி ஆட்டநேரமுடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றமையால் ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

இதில் அதிகபட்சமாக ஹரிசன் 28 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். பந்துவீச்சில் வாஸ், குலசேகர, சொய்சா, பண்டார ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

## சர்வதேச போட்டி நடுவராக ஜவகல் ஸ்ரீநாத் நியமனம்



புதுடெல்கி —

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஜவகல் ஸ்ரீநாத்தை, போட்டி நடுவராக ஐ.சி.சி தேர்வு செய்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஜவகல் ஸ்ரீநாத் - அபாரமான பந்துவீச்சு மூலம் பலமுறை இந்திய அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றுள்ளார். இவர் தற்போது போட்டி நடுவராக ஐ.சி.சியால் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

36 வயதான ஸ்ரீநாத் 229 ஒருநாள் போட்டிகளில் ஆடி 315 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். 23 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை வீழ்த்தியது அவரது சிறந்த பந்துவீச்சாகும். இதுமட்டுமல்லாமல் 883 ஓட்டங்களையும் பெற்றுள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட்டைப் பொறுத்தவரையில் ஸ்ரீநாத் மொத்தம் 67 டெஸ்ட் போட்டிகளில் ஆடி உள்ளார். அதில் அவர் 236 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். 86 ஓட்டங்களைக் கொடுத்து 8 விக்கெட்டுக்களை வீழ்த்தியது அவரது சிறந்த பந்துவீச்சாகும். 1009 ஓட்டங்களையும் அடித்துள்ளார்.

1991ஆம் ஆண்டு பிறிஸ்பேர்னில் நடந்த அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்டில், டெஸ்ட் அரங்கேற்றம் கண்ட ஸ்ரீநாத் கடைசியாக டெஸ்ட் போட்டியில் 2002ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் கொல்கொத்தாவில் நடந்த மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஆட்டத்தில் ஆடினார்.

ஒரு நாள் போட்டியைப் பொறுத்தவரையில் 1991 ஆம் ஆண்டு சார்ஜாவில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் அரங்கேற்றம் கண்ட அவர், கடைசியாக 2003ஆம் ஆண்டு அவுஸ்ரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் ஆடினார்.

## வலிகாமம் கல்வி வலய மெய்வல்லுனர் போட்டி

சங்கானை —

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் இந்தப் போட்டிகள் நாளை வரை நடைபெறவுள்ளதாக வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் வீ.பாலசிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தப் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் மே மாதம் 3ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி மைதானத்தில் நடைபெறுமெனவும் அவர் அறிவித்துள்ளார். (48)

# வன்முறைகளுடன் கூடிய புறச்சூழலுக்கு அரசாங்கமும், படைகளுமே முழுக் காரணம்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் —

இலங்கையில் வன்முறைகளுடன் கூடிய புறச்சூழல் உருவாகுவதற்கு இலங்கை அரசும், படைகளுமே காரணமாவர். அத்துடன் ஜெனிவாவில் இடம்பெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் வேண்டுகோளின் பேரில் பாதுகாப்புடன் கூடிய போக்குவரத்து ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யத் தவறியமையும் இன்றைய நிலைக்குக் காரணமென, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இன்று இலங்கையில் ஏற்பட்டிருக்கக்கூடிய மிக மோசமான யுத்த சூழ்நிலைகள் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு அவசரமாகக் கூடி ஆராய்ந்து பின்வரும் விடயங்களை இலங்கை மக்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் தெளிவுபடுத்த விரும்புகிறது.

இலங்கை அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் கடந்த பெப்ரவரி 22, 23 ஆம் திகதிகளில் ஜெனிவாவில் சந்தித்து போர் நிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்தினார்கள்.

இதன் முடிவில் இரு பகுதியினரும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் இரு சாராரும் போர் நிறுத்த உடன்படிக்கையை மதித்து அதைச் சீராக அமுல்படுத்த இணங்கியதுடன் மேலும் இலங்கை அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் எதுவிதமான அச்சுறுத்தல்களோ, வன்முறைகளோ கடத்தல்களோ, கொலைகளோ நடைபெறாமல் இருப்பதற்கான தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக ஒத்துக்கொண்டார்கள்.

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகள் பாதுகாப்புப் படையினருக்கோ, பொலிஸாருக்கோ எதிரான எந்தவிதமான வன்முறைகளிலும் ஈடுபடுவதில்லை என்பதையும் ஏற்றுக் கொண்டனர்.

இதற்குப் பதிலாக இலங்கை அரசாங்கம் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொண்டதன் பிரகாரம் இலங்கையின் அரச படைகள் தவிர்ந்த ஏனைய எந்தவொரு ஆயுதக் குழுவோ அல்லது தனிநபரோ ஆயுதங்களுடன் நடமாடுவதையோ அல்லது எந்தவொரு தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதையோ தடுத்து நிறுத்த நடவடிக்கைகளை எடுப்பது என்று உறுதியளித்தது.

இறுதியாக இரு சாராரும் ஏப்ரல் மாதம் 19, 20, 21 ஆம் திகதிகளில் மீண்டும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளைத் தொடருவதாக ஏற்றுக்கொண்டார்கள்.

ஜெனிவாவில் ஏற்பட்ட இணக்கப்பாட்டைத் தொடர்ந்து ஆயுதப்படைகளுக்கும், பொலிஸாருக்கும் எதிரான சகல வன்முறைகளும் தமிழீழ விடுதலைப் புலிகளால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

இதற்கு மாறாக அரச தரப்பின் சார்பாக ஜெனிவாப் பேச்சு வார்த்தைகளில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் கொழும்புக்குத் திரும்பியதும் அரசு-புலிகள் தரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டை மறக்காத வகையிலும், அதை சிறுமைப்படுத்தும் வகையிலும் அவர்களது செயற்பாடுகள் அமைந்திருந்தன.

அது மாத்திரமல்லாமல் ஏற்கனவே ஏற்றுக்கொண்டதன் பிரகாரம் துணைப்படைகளையோ, ஆயுதக் குழுக்களையோ நிராயுதபாணிகளாக்கும் எந்தவிதமான நடவடிக்கைகளும் இன்றுவரை மேற்கொள்ளப்படவில்லை.

மாறாக துணைப்படைகளும், ஆயுதக் குழுக்களும் முன்னரைவிட பல மடங்கு அதிகமாகத் தமிழ்பேசும் மக்களுக்கு எதிராகவும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான வன்முறைத் தாக்குதல்களிலும், கொலைகளிலும் ஈடுபட்டார்கள். இத்தகைய நடவடிக்கைகளுக்கு அரச படைகள் துணையாகவும், தூண்டுதலாகவும் இருந்தமை எல்லோரும் அறிந்த விடயமே.

இதற்கு ஆதாரமாக கடந்த 04.03.2006 அன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகளில் 5 பேர் திருமலையில் வைத்து அரச படைகளால் கடத்தப்பட்ட முதல் சம்பவத்துடன் தொடர்ச்சியாக வாகரைப் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காவலரண் மீது துணைப்படைகளால் தாக்குதல் நடத்தப்பட்டதுடன், ஈச்சிலம்பற்றுப் பிரதேசத்தில் ஒரு தமிழீழ விடுதலைப் புலிப்போராளி கொலை செய்யப்பட்டு இருவர் படுகாயமடைந்தனர்.

தொடர்ச்சியாக இதுபோன்ற சம்பவங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இன்றுவரை நடைபெற்று வருகிறது. இதே சமயம் தமிழ் பேசும் பொது மக்களுக்கு எதிரான இராணுவத்தினதும், துணைப்படைகளினதும் தாக்குதல்கள் கடந்த 05.03.2006 வழைச்சேனையில் ஆரம்பமாகி இன்றுவரை நீடித்து வருகிறது.

இவ்வாறான தாக்குதல்களில் இதுவரை 85 இற்கும் மேற்பட்ட தமிழ் பேசும் பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இதன் ஒரு கட்டமாகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படவிருந்த வ.விக்னேஸ்வரன் கடந்த 7 ஆம் திகதி திருமலையில் அதியுயர் பாதுகாப்பு வலய பிரதேசத்தில் வைத்து அரச படைகளாலும், துணைப் படைகளாலும் இணைந்து படுகொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் இடம்பெறும் வரையில் அரச படைகளுக்கோ அல்லது பொலிஸாருக்கோ எதிராக எந்த வித வன்முறைச் சம்பவங்களும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உண்மைநிலை இதுவாக இருக்கையில் இலங்கை அரசும், சமாதான செயலகமும் தாமும் அரச படைகளும் பொறுமையைக் கடைப்பிடிக்கின்றார்கள் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் தான் வன்முறையைத் தூண்டுவதாகக் கூறுவதானது - உண்மைக்குப் புறம்பானதும் சர்வதேச சமூகங்களை ஏமாற்றும் நோக்கத்தைக் கொண்டதுமாகும். இலங்கை அரசின் இத்தகைய செயற்பாட்டைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது.

இத்தகைய தொடர்ச்சியான தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான அரச பயங்கரவாத நடவடிக்கைகளின் பின்னர்தான் அரச படைகளுக்கும், பொலிஸாருக்கும் எதிரான வன்முறைகள் ஆரம்பமாகியது.

திருமலையில் படுகொலை செய்யப்பட்ட விக்கினேஸ்வரனின் மரணச் சடங்கில் கலந்துகொண்டு விட்டு கொழும்பு திரும்பிய நடராஜா ரவிராஜ் திருமலையில் காடையர்களால் கடந்த 11 ஆம் திகதி கடற்படைச் சிப்பாய்களின் முன்னிலையில் தாக்கப்பட்ட சம்பவத்தோடு திருமலையில் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான இனவன்முறையை அரச படைகளால் தூண்டி விடப்பட்டது.

அரச படைகளின் முன்னிலையில் பல தமிழ் மக்கள் கொலை செய்யப்பட்டதுடன், தமிழ் வர்த்தக நிலையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 30 இற்கும் மேற்பட்ட கடைகள் திட்டமிட்ட முறையில் கொள்ளையிடப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது.

இதன் விளைவாகக் கடந்த 25 ஆம் திகதி கொழும்பில் இராணுவத் தலைமையகத்தினுள் நடைபெற்ற குண்டுத் தாக்குதலின் பின்னர் திருமலை, மூதூர் பிரதேசங்களில் அப்பாவி தமிழ் பேசும் பொது மக்களின் வாழ்விடங்களின் மீது கண்மூடித்தனமாக நடத்தப்பட்டு வரும் வான், கடல், தரை மார்க்கத் தாக்குதல்களால் ஒரு சிறுமி, முஸ்லிம் மதகுரு உட்பட 12 இற்கும் மேற்பட்ட தமிழ் பேசும் மக்கள் கொல்லப்பட்டும், பலர் படுகாயங்களுக்கு உள்ளாகியும் உள்ளனர்.

இவை தவிர வட-கிழக்குப் பிர



தேசங்களில் நாளாந்தம் பல தமிழ் பேசும் பொது மக்களும் அரச பயங்கரவாதத்துக்கு இரையாகி வருகின்றனர். அத்துடன் வட-கிழக்கு மாகாண தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கை மோசமாகப் பாதிக்கப்படும் வகையில் அரச படைகளின் அராஜகம் உச்சக் கட்டத்துக்குச் சென்றுள்ளது.

குறிப்பாக ஒருதலைப்பட்சமாக ஏ-9 பாதை உட்பட புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லும் சகல பாதைகளும் காலவரையறையின்றி இராணுவத்தால் மூடப்பட்டுள்ளமையையும் தமிழ் தேசிய கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்த யதார்த்த நிலையைப் புரிந்து கொண்டு சர்வதேச சமூகம் உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறினால் இன்றைய நிலைமை மேலும் மோசமாகி அது பாரிய யுத்தத்துக்கு வழி வகுக்கும் என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆழ்ந்த கவலையுடன் சுட்டிக் காட்டுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### சிமெந்துக்கு தட்டுப்பாடு

சங்கானை —

முகமாலை - ஓமந்தை ஏ-9 போக்குவரத்து தடைசெய்யப்பட்டுள்ளதையடுத்து சிமெந்து பெறுவதில் சங்கானைப் பகுதி மக்கள் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இங்குள்ள சிமெந்து விற்பனை நிலையங்கள் சிமெந்தின் விலை கூடிய விலையில் விற்பதோடு மட்டுப்படுத்தப்பட்ட முறையில் இரண்டு பைக்கற் சிமெந்தையே வழங்கி வருகின்றனர். (48)

### உயர்தர மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கு

கரவெட்டி —

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத் தரங்கை கரவெட்டி ஸ்பேர்ஸ் விளை யாட்டுக் கழகம், வருடந்தோறும் நடத்தி வருகிறது.

இதன்படி, இந்த வருடத்துக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு இன்றும், நாளையும் விக்கினேஸ்வராக் கல்லூரியில் காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை நடைபெறவுள்ளது.

இன்று தமிழ், இந்து நாகரீகம் ஆகிய பாடங்களும் - நாளை இணைந்த கணிதமும் நடைபெறவுள்ளது. யாழ். பல்கலைக்கழக துறைசார் விரிவுரையாளர்களால் விரிவுரைகள் நடத்தப்படவுள்ளன.

# பொலிஸார் எனத் தெரிவித்து பெருமளவு பணம், நகை கொள்ளை

நெடுந்தீவு —

நெடுந்தீவில் இருந்து கடந்த வாரம் கொழும்புக்குச் சென்ற இரு குடும்பஸ்தர்கள் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் வைத்து, தம்மை பொலிஸார் என அடை யளங்களைக் காட்டிய கொள்ளையர்களிடம் பெருந் தொகை பணம், நகை என்பவற்றை பறிகொடுத்து நெடுந்தீவு திரும்பியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வவுனியாவில் இருந்து ரயிலில் பயணித்து, காலை கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இறங்கிய இருவரையும் அங்கு சதாரண உடையில் நின்றவர்கள் அழைத்து, தாம் பொலிஸார் என அடையாளம் காட்டிய பின்னர் பெருமளவு மக்கள் மத்தியில் உடற் சோதனை மேற்கொண்டு விட்டு அவர்களை பொலிஸ் நிலையம் வருமாறு கூறி பஸ் ஒன்றில் அழைத்துச் சென்றனர். தனியே சிங்கள மக்கள் வசிக்கும் பிரதேசமொன்றில் அவர்களை இறக்கி விட்டு அங்கு வைத்து அவர்களிடம் இருந்த பணம், அணிந்திருந்த நகைகள் என்பவற்றை அபகரித்தனர்.

இருவரும் இவற்றை கொடுக்க மறுத்தபோது கொள்ளையர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (113)

# விமானப் பயணத்துக்கு முண்டியடிக்கும் மக்கள்

யாழ்ப்பாணம் —

ஏ-9 வீதியால் பயணத்தை மேற் கொண்டு யாழ். குடாநாட்டுக்கு வருகை தந்த வெளியிடங்களைச் சேர்ந்த வர்களும், அவசர தேவைகருதி கொழும்பு செல்லவுள்ள பயணிகளும் விமானம் மூலம் தமது பயணத்தை மேற்கொள்ள கடந்த இரு நாட்களாக முண் டியடித்ததை காணமுடிந்தது.

இதனால் யாழ். நகரத்திலுள்ள விமானப் பயணத்துக்கான ரிக்கெட் வழங்கும் இடங்களில் பெருமளவில் மக்கள்கூடி தமது குறித்த தின பயணத்துக்கான ரிக்கெட்டைப் பெறுவதற்கு முண்டியடித்ததை காணக்கூடியதாக இருந்தது. (110)

# வெறிச்சோடிக் காணப்படும் சாவகச்சேரி நகரப்பகுதி

சாவகச்சேரி —

சாவகச்சேரி நகரிலும், நகரை அண்டிய பகுதிகளிலும் கடந்த சில நாட்களாக மக்கள் நடமாட்டம் குறைந்து வெறிச்சோடிக் காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

சாவகச்சேரி நகரப் பகுதியிலும், நகரை அண்டிய பகுதிகளிலும் கடந்த சில நாட்களாக இடம்பெற்ற சூட்டுச் சம்பவங்கள் கிரனைட் தாக்குதல்கள் போன்றவற்றையடுத்தே மக்கள் நடமாட்டம் குறைவடைந்துள்ளது.

அத்துடன் இந்தப் பகுதிகளில் இராணுவத்தினரது சோதனை நடவடிக்கைகள் வழமைபோன்று இடம் பெற்று வருகின்றன.

நகரப் பகுதியில் அடையாள அட்டைகளைப் பார்வையிடல், சந்தேகத்துக்கு இடமானவர்களைச் சோதனையிடல் போன்ற நடவடிக்கைகளிலும் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

சாவகச்சேரி நகரப் பகுதியில் கடைகள் யாவும் நேரகாலத்துடன் பூட்டப்படுகின்றன. சந்தைப் பகுதியிலும் மக்கள் நடமாட்டம் குறைவடைந்துள்ளது. நகரப் பகுதியிலுள்ள அரச தனியார் வங்கிகள் உள்ளிட்ட அரச அலுவலகங்கள் வழமைபோல் நமது சேவைகளை மேற்கொண்டு வருகின்றன. இதேவேளை நகரை அண்டிய பகுதிகளில் படையினரது ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

# தின்பண்டங்களை அனுமதி பெற்று விற்குமாறு கோரிக்கை


மானிப்பாய் —

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக்களின்போது பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அனுமதி அட்டை பெறாது இனிப்புகள், தேன் முறுக்குகள் மற்றும் ஐஸ்கிறீம் ஆகிய தின்பண்டங்களை விற்பனை செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் சு.சிவகணேஸ் தெரிவித்தார்.

இந்தப் பகுதியிலுள்ள ஆலயங்களில் வருடாந்த உற்சவங்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. எனவே, இந்தத் தின்பண்டங்களை விற்பனை செய்பவர்கள் தமது பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் விண்ணப்பித்து அதற்கான அனுமதியைப் பெறவேண்டும்.

அவ்வாறு அனுமதி பெறாது இவற்றை விற்பனை செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





கவிஞர் சோ.பத்மநாதனின் ‘நினைவுச் சுவடுகள்’ கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா - நிகழ்வில் தலைமையுரையை பேராசிரியர் அ.சண்முகதாஸ் நிகழ்த்துவதையும், கவிதைத் தொகுப்பை முன்னாள் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை வெளியீட்டு வைப்பதையும் படங்களில் காணலாம்.

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

## தமிழ் I

முதலாம் பகுதியிலுள்ள இரு வினாக்களுட்பட எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. அ) மேல்வரும் பாடல்களின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
ஆ) தடித்த எழுத்திலுள்ள தொடர்களின் பொருட் சிறப்பை எழுதுக.

I) கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழிஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
**நறியவும் உள்வோ நீயறியும் பூவே**

II) சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல்
சீருடைச் செல்வர் சிறுதுனி **மாரி**
**வறங்கூர்த் தனையது உடைத்து**
இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம் என்னும் நல்லாள் நகும்
அறம்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல் நோக்கப்படும்

III) தாய ருந்தலைப் பெய்து தாந்தழீஇ
ஓய்வில் துன்பினா லுரற லோங்கினார்
ஆய சேனையு மணங்க னார்களும்
**தீயில் வீழ்ந்து தீ மெழுகிற் றேம்பினார்**
பின்னவ் வீரரைப் பெற்ற பெற்றியப்
பொன்ன னார்களுஞ் சனகன் பூவையைத்
துன்னி மார்புறத் தொடர்ந்து புல்வினார்
இன்னல் வேலைபுக் கிழிந்த முந்துவார்

IV) வள்ளலை ஒருநான் மறைக்கும் அரும் பொருளை
**மறைபடாது இலங்கும் ஒண்மதியை**
தள்ளுததற்கரு மும்மலத் தையும் கடந்தோர்
தலத்தினுள் விளங்கிய கனியை
கள்ளவிழ் மரவ மலர்த்தொடைப் புயரைக்
கருணையங் கடலினிற் பிறந்த
தேனமுது அனைய முகம் மது நபியைத்
தெரிசிக்கும் கண்களே கண்கள்

02. பின்வரும் கவிதையை
அல்லது
உரைநடைப் பகுதியை வாசித்து அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ) எழுந்தது செங்க திர்தான் கடல்மிசை; அட்டா எங்கும்
விழுந்தது தங்கத் தூற்றல்; வெளியெலாம் ஒளியின் வீச்சு
முழங்கிய நீர்ப் பரப்பின் முழுதும் பொன்னொளி பரக்கும்
பழங்கால இயற்கை செய்யும் புதுக்காட்சி பருகு தம்பி

அக்கரை சோலை போலத்தோன்றிடும்! அந்தச்சோலை
திக்கெல்லாம் தெரியக் காட்டும்; இளங்கதிர்ச் செம்ப ழத்தைக்
கைக்கொள்ள அம்முகில்கள் போராடும்! கருவானத்தை
மொய்த்துமே செவ்வா னாக்கி முடித்திடும் பாராய் தம்பி

இளங்கதிர் எழுந்தான்; ஆங்கே இருளின் மேல் சினத்தை வைத்தான்
களித்தன கடலின் புட்கள்; எழுந்தன சைகள் கொட்டி
ஒளித்தது காரிருள்போய்; உள்ளத்தில் உவகை பூக்க
இளங்கதிர் பொன்னி றத்தை எங்கனும் இறைக்கலானான்
செழுங்கதிர் உச்சி ஏறிச் செந்தணல் வீசு தல்பார்;
புழுங்கிய மக்கள் தம்மைக் குறிர்காற்றால் புதுமை செய்து
முழங்கிற்று கடல்; இவ்வைய முழுவதும் வாழ்விற் செம்மை
வழங்கிற்றுக் கடல்; நற்செல்வம் வளர்கின்ற கடல் பார் தம்பி

பொன்னுடை களைந்து வேறே புதிதான முத்துச் சேலை
தன்னிடை அணிந்தாள் அந்தக் தடங்கடற் பெண்ணாள்; தம்பி

என்னென்று கேள்; எழில்நிலா ஒளி கொட்டிற்று;
மன்னியே வாழி என்று கடலினை வாழ்த்தாய் தம்பி

i. புதுக்காட்சியெனக் கவிஞர் எவற்றை வர்ணித்துள்ளார்?
ii. காலைக்காட்சி எவ்வாறு வர்ணிக்கப்பட்டுள்ளது?
iii. கடலின் பயன்களாக 'உச்சிப்பொழுது' பற்றி பாடலில் கூறப்பட்டவை யாவை?
iv. பொன்னுடை களைந்து வேறே புதிதான முத்துச் சேலை தன்னிடை அணிந் தாள் அந்தக் தடங்கடற் பெண்னாள் எனும் கவியடிகளின் பொருட் சிறப்பைத் தருக.

ஆ) எப்போது பார்த்தாலும், ஏதாவது வேலை செய்தபடி இருப்பவர்களையும் காண லாம்; வேலை ஏதும் செய்யாமலிருப்பவர்களெல்லாம் ஓய்வாக இருக்கிறார்கள் என்று கூறிவிட முடியாது வேலை ஏதும் கிடைக்காததால் அப்படி உள்ளவர்களே ஏராளம்.
ஓய்வு நேரம் வேலை கிடைத்து அதிலே ஈடுபட்டு உள்ளவர்களும் வேலை நேரம் போக மிச்சமிருக்கும் பொழுது வேலை செய்யும் நிலையில் இல்லா தவர்களின் 'காலம்' ஓய்வு அல்ல இது ஓய்யாரம். வேலை கிடைக்காததால் வேலை செய்யாது இருப்பவர்களுக்கு கிடைத்திருப்பது ஓய்வு அல்ல 'திகைப்பு' வேலை செய்யும் மனப்பான்மையற்றவர்கள் காலத்தைக் கொலை செய்வது 'ஓய்வு' அல்ல - அது சோம்பல் ஆக யாராவது ஒரு வேலையும் செய்யாது இருக்கும் போது அவர் ஓய்வாக இருக்கிறார் என்று கூறிவிடக் கூடாது.
ஓய்வு வேறு, வேலையற்று இருப்பது முற்றிலும் வேறு, காலை முதல் மாலை வரை பாடுபட்டு வேலை செய்து பிழைக்கும் பாட்டாளிக்கு, இரவு தெருக் கோடியில் நடைபெறும் 'கூத்து' ஓய்வு நேரப் பொழுது போக்காக அமைகிறது. கூத்தாடுபவர்களுக்கோ, இரவு முழுவதும் கூத்தாடி அலுத்து, காலையிலே படுத்துத் தூங்கி பகலில் விழித்தபடி புரண்டுவிட்டு மாலை நேரத்தில் வெளியே சென்று வருவது, ஓய்வு நேரம்- 'பொழுதுபோக்கு' நேரம். வேடிக்கையாகச் சொல்வார்கள், ரயில் ஓடும்போது போட்டருக்கு ஓய்வு - ரயில் நின்று சில நிமிடம் ஓய்வு கொள்கிறதே அப்போது போட்டருக்கு வேலை. அதுபோல 'ஓய்வு நேரம்' ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலை.

i. 'ஓய்வு நேரம்' - 'ஓய்யாரம்' இரண்டிற்குமான வேறுபாடு யாது?
ii. 'திகைப்பு' 'சோம்பல்' என எவற்றைக் கூறியுள்ளார்?
iii. ஓய்வு நேரம் பொழுதுபோக்காக எவற்றைக் கூறியுள்ளார்?
iv. வேடிக்கை என எதனைக் குறிப்பிட்டுள்ளார்?

03. பண்புடைமை பற்றித் திருவள்ளுவர் கூறுவனவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
அ) பண்புடையர் ஆதற் காரணம் ஆ) பண்புடையாரது உயர்ச்சி
இ) பண்பிலா வழிப்படும் குற்றம் ஈ) உவமையணிச் சிறப்புகள்

04. திருவடி சூட்டுபடலத்தில் மறைந்த தந்தைக்கு இராமன் நீர்க்கடன் செய்து மீண்டது முதல் வசிட்டனின் வேண்டுகோளை மறுத்தது வரையுள்ள பகுதியில்
அ) முனிபத்தினியர் சீதை துயரைப்போக்குதல்
ஆ) ஆட்சியை இராமனே ஏற்க வேண்டும் எனப் பரதன் கூறிய நியாயங்கள்
இ) குருவின் பெருமையாக வசிட்டன் கூறியவையும் சத்தியமேன்மையாக இரா மன் கூறியவையும் எவை?

5. கலிங்கத்துப் பரணியில் பின்வருவனவற்றைத் துலக்குக.
அ) குலோத்துங்கன் பெருமை ஆ) தற்குறிப்பேற்ற அணிகள்
இ) நிலத்தின் இயல்பு

## தமிழ் II

முதலாம் பகுதியிலுள்ள மூன்று வினாக்களுக்கும், இரண்டாம் மூன்றாம் பகுதிகளிலி ருந்து ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வினாவையேனும் உள்ளிட்டு மூன்று வினாக் களுக்கும் எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி I

01. மேல்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 350-400 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.
அ) பேராசிரியர்.எஸ். தனிநாயகம் அடிகளார்
ஆ) சூழலைப் பேணுவோம்
இ) சிறுவர் நலம் காப்போம்
ஈ) தமிழிற் குழந்தை இலக்கியம்
உ) நவீன தகவல் தொடர்பாடல்

02. பின்வரும் செய்யுள் பகுதிகளைப் படித்து அவை ஒவ்வொன்றின் கீழும் தரப்பட் டுள்ள வினாக்களுக்கு விடை தருக.
அ) நெல்லுக்கு இறைத்தநீர் வாய்க்கால் வழி ஓடிப் புல்லுக்கும் ஆங்கே பொசியு மாம் - தொல் உலகில் நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை.
1. இப்பாடலின் பொருளை 30 சொற்களுக்குக் குறையாமல் விரித்தெழுதுக. அணியை விளக்குக
2. இறைத்த நீர், தொல் உலகு, நல்லார் என்பனவற்றுக்கு இலக்கணம் கூறுக.
ஆ) அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக் கடக்கக் கருதவும் வேண்டா - மடைத் தலையில் ஓடு மீன் ஓட உறுமீன் வரும் அளவும் வாடியிருக்குமாம் கொக்கு
1. இப்பாடலின் பொருளை உமது மொழி நடையில் சுமார் 30 சொற்களுக்குக் குறையாமல் விரித்தெழுதுக.
2. இப்பாடலில் உள்ள வினைத்தொகை ஒன்றையும், உரிச் சொற்றொடர் ஒன் றையும் குறிப்பிடுக.
3. மேல்வரும் பதினைந்து வினாக்களும் (அ), (ஆ), (இ) என மூன்று பகுதிக ளாகத் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியிலுமிருந்து ஆகக் குறைந்தது இர ண்டு வினாக்களையேனும் தெரிந்து எல்லாமாகப் பத்து வினாக்களுக்கு மட் டும் விடை எழுதுக.

அ)
1. அவர் கன்னியராகி நிலவினி லாடிக் களித்ததும் இந்நாடே -இதிலுள்ள அகச் சுட்டையும், புறச்சுட்டையும் குறிப்பிடுக.
2. பின்வருவனவற்றுள் தற்காலத்தில் மொழி மரபை மீறி உச்சரிக்கப்படுகின்ற மெய்கள் யாவை?
த், ட், ற், வ், ஞ்
3. பஃறுளி, அஃகான் இச்சொற்களில் இடம் பெற்ற ஆய்த எழுத்துக்களின் மாத் திரைகளைக் குறிப்பிடுக.
4. புல்+தரை, பசுமை + தமிழ் இவற்றைப் புணர்த்தி, விகாரங்களைக் குறிப் பிடுக.
5. அகனமர்ந்து செய்யாளுறையும் முகனமர்ந்து நல் விருந்தோம்பு வானில் இதி லுள்ள எழுத்துப் போலிகளைக் குறிப்பிடுக.

ஆ) 6. அ) அக்கா சட்டைக்குத் துணிவாங்கினாள்
ஆ) மரத்தால் செய்தமேசை
இவற்றுள் அதுவாதல் பொருள் இடம் பெற்ற தொடர் யாது? அது எத் தனையாம் வேற்றுமை.
7. அண்டா, அலுமாரி, கச்சவடம், சாம்பார் இவை என்னமொழிச் சொற்கள்
8. குழூஉக்குறிக்கு இரு உதாரணம் தருக.
9. சங்கமம், ஜெபம் இருசொற்களுக்கும் உள்ள வேறுபாடு யாது?
10. கலை, தேய் இவை செயப்படுபொருள் குன்றிய வினையாகவும், குன்றாத வினையாகவும் வர வாக்கியங்கள் அமைக்குக.
11. கடி எனும் உரிச்சொல் கூர்மை, வேகம், அச்சம், காப்பு ஆகிய பொருள்களில் வருவாக்கியம் அமைக்குக.
12. நானோ அரசன், நானே கள்வல் இவற்றில் இடம்பெற்ற இடைச்சொற்கள் யாவை? அவை என்ன பொருளில் வந்துள்ளன?

இ) 13. முட்டைக்குங் காட்டுக் கேகினார் இதனைப் பொருளுக்கேற்ப சந்திபிரிக்குக.
14. குமார் அவரது மனைவியைக் கூட்டிச் சென்றார். இத்தொடரில் இடம் பெற்ற பொருள்மயக்கத்தைச் சுட்டிக்காட்டித் திருத்துக.
15. யாழ்ப்பாணம் தோறும் கோவில்கள் உள்ளன. இதில் இடம் பெற்ற வழுவைச்சுட்டிக்காட்டித் திருத்தியெழுதுக.
16.1. கண்ணன் கண்டிக்குச் சென்றான்
2. குமார் கண்டிக்குச் சென்றான்
3. நான் கொழும்புக்குச் சென்றேன் பொருத்தமான இணைப்பிடைச் சொற்களைப் பயன்படுத்தி இவ்வாக்கியங்களை இணைக்குக.

### பகுதி II

4. அ) சங்ககால இலக்கியங்களை அகம்கூறுவன, புறம் கூறுவன என வகுக்குக.
ஆ) சங்க இலக்கியப் பொருள் மரபைத் தருக.
5. அ) சங்கமருவிய கால இலக்கியங்களை அறம் கூறுவன, பக்தி கூறுவன என வகைப்படுத்துக.
ஆ) சங்கமருவிய கால இலக்கியங்களில் பிரதானமான பண்பைத் தருக.
இ) இக்காலத்தில் பெருவாரியான அறநூல்கள் எழக் காரணியாக அமைந்தவற்றைத் தருக.
6. அ) நாயக்கர் காலப் பிரபந்தங்களை வகைப்படுத்தி விளக்குக.
ஆ) இக்காலத்திற் தோன்றிய பொதுமக்கள் சார்பான இலக்கியங்கள் பற்றிக் கூறுக.

### பகுதி III

7. அ) போர்த்துக்கேயர் காலம் வரையான இலக்கியங்களை வகையிடுக.
ஆ) ஒல்லாந்தர்கால இலக்கிய வளர்ச்சிப் போக்கை விபரிக்குக.
8. அ) இலங்கையில் தமிழ் நாவலின் தோற்றத்துக்கு ஏதுவாயமைந்த சூழ்நிலைகளை விளக்குக.
ஆ) 20 ஆம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ் நாவல் வளர்ச்சியை மதிப் பிடுக
9. மேல்வருவோருள் யாரேனுமிருவர் இலங்கைத் தமிழிலக்கிய வளர்ச்சி யிற் பெறும் இடத்தை மதிப்பிடுக.
அ) நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்
ஆ) புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை
இ) பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை
ஈ) அறிஞர் சித்திலெவ்வை
உ) பேராசிரியர் நந்தி

ஆசிரியர் - நாகதமிழிந்திரன்
யாழ்.மத்திய கல்லூரி.

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

## இந்துசமயம் I

அ- பகுதியிலுள்ள முதலாம் வினாவிற்கும் ஆ- பகுதியிலுள்ள எவையேனும் நான்கு வினாக்களுக்கும் விடைகள் எழுதுக.

### அ - பகுதி

01. சத்தியமான பொருள் ஒன்றுதான் என்ற கருத்தைக் கூறும் இலக்கியம்.
   1. ஆகமம் 2. புராணம்
   3. மகாபாரதம் 4. இருக்குவேதம்
02. பின்வருவோரில் சித்தர் அல்லாதவர்
   1. திருமூலர் 2. பட்டினத்தார் 3. நவநாதர் 4. ரமணர்
03. பின்வருவனவற்றுள் பண்டிகை என்பதற்குள் அடங்காதது
   1. தீபாவளி 2. பொங்கல்
   3. திருவாதிரை 4. வருடப்பிறப்பு
04. திருகாமக் கோட்டம் என்பதில் உறையும் தெய்வம்
   1. முருகன் 2. அம்மன் 3.திருமால் 4. சூரியன்
05. திருவட்பயனுக்கு உரையெழுதிய ஈழத்தவர்
   1. நாவலர் 2. கதிரவேற்பிள்ளை
   3. ஞானப்பிரகாசர் 4. சிவபாதசுந்தரனார்

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தருக.**

06. ''விபூதி'' என்பதன் பொருள் யாது?
...........................................................................
07. குருவழிபாடு இயற்றி நற்கதி பெற்ற மூவரைத்தருக?
...........................................................................
08. இலங்கையிலுள்ள திருப்படைக் கோயில்கள் ஐந்து தருக?
...........................................................................
09. வேதாந்த சூத்திரம் எதனை எதன் அடிப்படையில் விளக்குகின்றது?
...........................................................................
10. சங்கிராந்தி தினத்தை அடிப்படையாகக் கொண்ட பண்டிகை எது?
...........................................................................

**பின்வரும் கூற்றுக்கள் சரியா-பிழையா என எதிரே உள்ள கூட்டில் அடையாளமிடுக.**

11. விஷ்ணு புராணங்களில் பாகவதபுராணம் என்பதும் அடங்கும் ( )
12. வேதத்தின் தியானத்துக்குரிய பகுதி ஞானகாண்டமாகும் ( )
13. தமிழ்நாட்டில் கோயில் வழிபாடு மரங்களின் கீழே தொடங்கியது எனலாம் ( )
14. பெரியபுராணத்தில் 'தமிழாகரன்' என்பது சிவபெருமானைக் குறிக்கும் ( )
15. மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை சைவத் திருமுறைகளில் ஒன்றாகும் ( )

**பின்வரும் இடைவெளிகளைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.**

16. பாகவத சமயத்தில் .................................... ஆகிய ஆகம வழக்குகள் பின்பற்றப்படுகின்றன.
17. வடமொழி பக்தி நூல்களில் ஒன்றாகிய .................................... குமாரக் கடவுளின் அவதாரம் பற்றியது.
18. சிவனது திருவடிகளை அடைவதற்குரிய நெறிகள் .................................... ஆகிய நான்குமாகும்.
19. நாட்டுப்புற வழிபாட்டில் .................................... முதலிய சடங்குகள் சிறப்புப் பெறுகின்றன.
20. சுந்தரர் பாடிய .................................... பெரியபுராணத்துக்கு முதல் நூலாக விளங்குகிறது.

(புள்ளிகள் 1X20 = 20)

### ஆ- பகுதி

02. விநாயகர் வழிபாடு அல்லது சக்தி வழிபாடு இந்துக்கள் மத்தியில் பெறும் செல்வாக்கைப் பின்வரும் அம்சங்களில் எடுத்துக்காட்டுக?
   அ. திருமூர்த்தங்கள் ஆ. பிரதிமாலட்சணம்
   இ. தத்துவக் கோட்பாடுகள் ஈ. சைவசமயத் தொடர்பு
   உ. சமுதாய முக்கியத்துவம்
   (புள்ளிகள்4+4+4+4+4=20)
03. சிவனுடைய திருவிக்கிரகங்கள் ஒன்றினைத் தெரிவு செய்து அதனைப் பின்வரும் அம்சங்களில் விளக்குக?
   அ. அமைப்பு முறை ஆ. புராண மரபுகள்
   இ. சமயக் கோட்பாடுகள் ஈ. ஆலயங்களில் நிறுவப்படும் முறை
   (புள்ளிகள் 5+4+6+5=20)
04. இந்து திருநூல் வரிசையிலும் பிரஸ்தான திரயங்களிலும் பகவத்கீதை பெறும் முக்கியத்துவத்தை ஆராய்க? (புள்ளி =20)
05. சைவசமய வளர்ச்சியில் பின்வருவோர் ஆற்றிய பங்களிப்பை எடுத்துக் காட்டுக.
   அ. திருஞானசம்பந்தர் ஆ. அப்பர் சுவாமிகள்
   இ. சுந்தரமூர்த்தி நாயனார்
   (புள்ளி=20)
06. இந்துக்களின் சமூக விழுமியங்களை நெறிப்படுத்துவதற்கு கூத்து அல்லது காவடி பெறும் முக்கியத்துவத்தை விளக்குக? (புள்ளி =20)
07. இலங்கையின் முருகவழிபாடு அல்லது திருமால் வழிபாடு பெற்ற செல்வாக்கினை ஆராய்க. (புள்ளி =20)
08. செயலில் துறவு எனும் மகாவாக்கியத்தின் அடிப்படையில் தோற்றம் பெற்றவையே மடாலயங்கள்.
   அ - மடம், ஆதீனம் என்பவற்றின் பொருள் யாது.
   ஆ- மடங்கள் தோன்றியமைக்கான சூழ்நிலையினைச் சுருக்கமாகத் தருக
   இ- தமிழகத்தில் அமைந்துள்ள மடங்கள் ஐந்தின் பெயர்களைத் தருக?
   ஈ - தர்மபுர ஆதீனத்தின் தொண்டுகளை மதிப்பிடுக?
   (புள்ளிகள் 2+3+3+12=20)
09. ''ஐந்தாம் வேதங்களாக மதிக்கப்படக்கூடியவை புராண இதிகாசங்கள் ஆகும்''
   அ- புராணம் என்பதன் பொருளை விளக்குக?
   ஆ- மகாபுராணங்களை வகைப்படுத்துக?
   இ- புராணங்களுக்கும் வேதகங்களுக்கும் இடையிலான தொடர்பை விளக்குக?
   ஈ- 'புராணங்கள் தென்னாட்டின் கருவூலங்கள்' எடுத்துக்காட்டுக?
   (புள்ளிகள் 2+5+5+8=20)
10. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்று பற்றிக் குறிப்பெழுதுக
   1- பண்ணிசை
   2- புராணபடனம்
   3- கடையிற் சுவாமிகள்
   4- பிரமதேயம்
   5- சங்கம வழிபாடு
   6- தீபாவளி
   7- திருவாவடுதுறை ஆதினம்

(புள்ளிகள் 6+6+6+18+2=20)

## இந்துநாகரிகம் I

அ- பகுதியிலுள்ள முதலாம் வினாவிற்கும் ஆ- பகுதியிலுள்ள எவையேனும் நான்கு வினாக்களுக்கும் விடைகள் எழுதுக.

### அ - பகுதி

**பின்வருவனவற்றுள் சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.**

01. புராணங்களில் குறிப்பிடும் முனிவர்களில் ஒருவர் அல்லாதவர்
   1. வியாசர் 2. அகத்தியர்
   3. அஸ்வத்தாமா 4. துரோணர்
02. பின்வருவனவற்றுள் அத்துவாக்கள் அல்லாதது
   1. மந்திரம் 2. பன்னம்
   3. ஆசனம் 4. பதம்
03. இந்துக்களின் புராதன கல்வி நிறுவனங்களில் ஒன்றாக விளங்காதது.
   1. குருகுலம் 2. மேருபடலம்
   3. கண்டிகை 4. தபோவனம்
04. கீரிமலைச் சிவன் கோவிலில் வீற்றிருக்கும் இறைவி
   1. பார்வதி 2. வடிவாம்பிகை
   3. நகுலாம்பிகை 4. மங்களாம்பிகை
05. காரணமும் உண்மை காரியமும் உண்மை என்ற கொள்கைகளை விளக்கும் சொல்
   1. காரணவாதம் 2. சற்காரணவாதம்
   3. பரிணாமவாதம் 4. சற்காரியவாதம்

**பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.**

06. சாதாரண மக்களின் பொருட்டு சிவன் கொள்ளும் வடிவம் யாது?
...........................................................................
07. திருவாதவூரடிகள் புராணத்தின் ஆசிரியர் யார்?
...........................................................................
08. அநாத்ம வாதம் என்று அழைக்கப்படும் மதம் எது?
...........................................................................
09. பரார்த்த லிங்கத்தில் இடம்பெறும் பஞ்சலிங்கங்களும் எவை?
...........................................................................
10. இலங்கைத் திருக்கோயில்களில் தேவர்பதி எனப்படுவது எது?
...........................................................................

**பின்வருவன சரியாயின் சரியெனவும் பிழையாயின் பிழையெனவும் அடையாமிடுக.**

11. பக்தோற்சவம் நைமித்திய கிரியைகளில் ஒன்றாகும் ( )
12. ஆணவம் இருளிலும் கொடியது என்பதை திருவருட்பயன் விளக்குகிறது ( )
13. உருத்திராட்ச தாரணம் சிவசொரூபத்துக்கு அறிகுறியாகும் ( )
14. இந்துசமயப் பிரிவுகளுக்கெல்லாம் வேதங்கள் ஆதாரமானவை ( )
15. ஸ்ரீசைலம் திருப்படைக் கோயில்களில் பிரசித்தி பெற்றது. ( )

**பின்வருவனவற்றுக்குப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

16. நவீனகால சீர்திருத்தவாதிகளில் ஒருவர் .................................... ஆவார்.
17. இவர் .................................... நாட்டிலே வங்காளதேசம் காமர்பூரில் பிறந்தார்.
18. இவருடைய தெய்வீகத் திருநாமம் .................................... என்பதாகும்.
19. பெண்மையில் தெய்வீகத்தைக் கண்டுவணங்கிய இவர் சிறந்த .................................... பக்தராவார்.
20. இவருடைய நாமம் தாங்கி .................................... என்னும் நிறுவனம் சமயப்பணியாற்றி வருகிறது.

( புள்ளிகள் 1X20 = 20)

### ஆ - பகுதி

02. இந்துப்பண்பாட்டு மரபில் இதிகாசம் பெறும் முக்கியத்துவத்தினை கீழ்வரும் விடயங்களில் ஆராய்க?
   அ. சமயநெறிகள் ஆ. அரசியல்
   இ. ஒழுக்கநெறி ஈ. இலக்கிய மரபு
   (புள்ளிகள் 5+4+7+4=20)
03. வட இந்தியாவில் குப்தர் காலத்தில் ஏற்பட்ட சமய மறுமலர்ச்சியைப் பின்வருவனவற்றைக் கருத்தில் கொண்டு ஆராய்க.
   அ. சமயநிலை ஆ. அரசியல் செல்வாக்கு
   இ. இலக்கிய வளர்ச்சி ஈ. கோயிலும் கலைகளும்
   (புள்ளிகள் 6+4+4+6=20)
04. 'இலங்கையின் இந்து சமய வரலாற்றில் பௌத்த சமயத்தின் செல்வாக்கு' என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.
05. வைதீக சமய வளர்ச்சியில் இராமானுஜரின் பங்களிப்பினை பின்வரும் விடயங்களில் எடுத்துக் காட்டுக?
   அ. வாழ்க்கை வரலாறு ஆ. வேதாந்த விளக்கம்
   இ. முப்பொருள் கொள்கை ஈ. பரசமயத் தொடர்புகள்
   (புள்ளிகள் 4+4+8+4=20)
06. ஆங்கிலேயர் காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட சைவசமய மறுமலர்ச்சியில் நாவலரின் பங்களிப்பினை பின்வரும் விடயங்களில் மதிப்பிடுக?
   அ. சமய மறுமலர்ச்சி ஆ.சமுதாய சீர்திருத்தம்
   (புள்ளிகள் 9+9=18+2=20)
07. அறுவகைச் சமயக் கோட்பாடுகளில் காணபத்தியம் பெறும் செல்வாக்கைக் கீழ் வருவனவற்றைக் கருத்திற் கொண்டு ஆராய்க?
   அ. கணபதி வடிவங்கள் ஆ. புராணக் கதைகள்
   இ. வழிபாட்டு முறைகள் ஈ. ஈழநாட்டில் கணபதி வழிபாடு
   (புள்ளிகள் 4+3+6+7=20)
08. தென்கிழக்காசியாவில் நிலவிய இந்து சமயப் பாரம்பரியங்களைக் கீழ்வரும் விடயங்களில் ஆராய்க.
   அ. பரம்பல் ஆ. சமயநிலை
   இ. கோயிலும் கலைகளும் ஈ. இலக்கிய சம்பிரதாயங்கள்
   (புள்ளிகள் 3+6+6+5=20)
09. ஒரு சமய இலக்கியம் என்ற வகையில் பகவத்கீதை பெறும் இடத்தினை மதிப்பிடுக.
10. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கு பற்றி விளக்கக் குறிப்புகள் எழுதுக.
   1- சிதம்பரம்
   2- துளசிதாஸர்
   3- புராணபடனம்
   4- தர்மசாஸ்திரம்
   5- மடாதீனங்கள்
   6- திருக்கோணேஸ்வரம்
   7- வேதகால தெய்வீக வரலாறு

(புள்ளிகள் 4+4+4+4+4=20)

ஆசிரியர் :- செ.சிவஞானம்.
B.A.HONS. JAFFNA
கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்.

# வவுனியாவில் கொலைகளை உடன் நிறுத்த மக்கள் கரம்கோர்த்து நிற்க வேண்டும்!

## வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம்

வவுனியா—

படுகொலைகளை நிறுத்த வவுனியா மக்கள் கரம் கோர்த்து நிற்க வேண்டும் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராத லிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் சுட்டுக் கொலை செய்யப்பட்ட பிரபல வர்த்தகரும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் வன்னி மாவட்ட தலைவரும், வவுனியா நகரசபை பிரதான வேட்பாளருமான ஏ.கே. செந்தில்நர்தனின் படுகொலை தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது -

தனது வர்த்தக நிறுவனத்தில் வழமையான வியாபார பணிகளில் ஈடுபட்ட வேளையில், பாதுகாப்புகள் நகரில் பலப்படுத்தப்பட்டிருந்த வேளையில், அவரை சுட்டுவிட்டு கொலையாளிகள் தப்பித்துச் சென்றமை எமது சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்துகின்றன.

கொலையாளிகள் தப்பித்துச் செல்வது வவுனியாவில் சாதாரண விடயம் என்றால் நகரில் எந்தப் பாதுகாப்புத் தரப்பினரும், பொலிஸாரும் நகரில் அச்சத்தையும், பதற்றத்தையும் மட்டுமே உருவாக்குகின்றனரே தவிர எந்தப் பாதுகாப்பையும் மக்களுக்கு வழங்கவில்லை. படையினர் முழுமையாக வெளியேறினால் மக்கள் தங்களை தாங்களே பாதுகாத்துக் கொள்வர்.

வவுனியாவில் நாளாந்தம் நடைபெறும், கொலைகள், ஆட்கடத்தல்களுக்கு இதுவரை பாதுகாப்பு தரப்பினரால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. துப்பாக்கி ஏந்தி நிற்கும் படையினரோ, பொலிஸாரோ இல்லாவிட்டால் பொதுமக்களால் கொலையாளிகள் இலேசாகப் பிடிக்கப்படுவார்கள். கொலையாளிகள் தப்பித்துக் கொள்ள வசதியாகவே அவர்கள் செயற்படுகிறார்கள்.

செந்தில்நாதன் நேர்மையான, தூய்மையான அரசியல் பணியை மேற்கொண்டவர். யாருடனும் பகைத்துக் கொள்ள, முரண்பட்டுக்கொள்ள விரும்பாதவர். வன்னிமண்ணிலே சிறந்த ஒரு கொடையாளி. அரசியலில் மட்டுமல்லாது பொதுப்பணிகளிலும் ஈடுபட்டு வந்தவர். எல்லாவற்றுக்கும் மேலாக இறுதிவரை தமிழ்த் தேசியத்துக்காக உழைத்த உன்னதமான மனிதன்.

தேசியத்துக்கு எதிரான குணம் கொண்டவர்களின் கொடூரமான, கோழைத்தனமான இந்தத் தாக்குதலை மிகவும் வன்மையாக கண்டிக்கிறோம்.

இந்தக் கொலைகளை நிறுத்த வன்னிமக்கள் குறிப்பாக வவுனியா மக்கள் ஒன்றிணைய வேண்டும். கொலைகாரர்கள் எமது வீட்டுக் கதவுகளையும் தட்டமுன்பே நாம் ஒன்றிணைந்து சவால்களை சந்திக்கத் தயாராக வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுதேச மருத்துவர்கள் பாதுகாப்பு சபையின் மாதாந்த கலந்துரையாடல் கிளிநொச்சியில்

கிளிநொச்சி—

கிளிநொச்சி மாவட்ட மருத்துவர்கள் பாதுகாப்பு சபையின் மாதாந்த கலந்துரையாடல் கிளிநொச்சி தமிழீழ சுகாதார சேவைகள் ஒன்றுகூடல் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

சுதேச பாதுகாப்பு சபை தலைவர் மருத்துவர் திருலோகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் - மூலிகை உற்பத்தி தொடர்பாகவும், சுதேச மருத்துவத் துறையை மேம்படுத்துவது தொடர்பாகவும் ஆராயப்பட்டதுடன், பாடசாலைகளில் விழிப்புணர்வு செயற்பாட்டில் ஈடுபடல் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் தமிழீழ சுகாதார சேவைகள் சுதேச மருத்துவப் பிரிவு பொறுப்பாளர் மருத்துவ கலாநிதி தேவா, கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பெருமளவான சுதேச மருத்துவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அடுத்த கலந்துரையாடல் எதிர்வரும் 3 ஆவது வெள்ளிக்கிழமை நடைபெறும் எனத் தெரிவிக்கப் பட்டது. (கு)

# முல்லைத்தீவு பாடசாலைகளில் காசநோய் விழிப்புணர்வு!

முல்லைத்தீவு —

தமிழீழ சுகாதார சேவையினரால் காசநோய் விழிப்புணர்வு மாதத்தில் தொடர்ச்சியான செயற்பாடாக முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்றது.

முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் கடந்த 24 ஆம் திகதியும், முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் கடந்த 25 ஆம் திகதியும், வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் கடந்த 26ஆம் திகதியும் காச நோய் விழிப்புணர்வு கண்காட்சி, விடியோ படக்காட்சி, காசநோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தூட்டல்கள் என்பன நடைபெற்றன.

இதில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்களெனப் பெருமளவானோர் கலந்து கொண்டு பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பொருட்களின் தட்டுப்பாடு குறித்து கிளிநொச்சியில் கலந்துரையாடல்!

கிளிநொச்சி —

ஏ 9 வீதி மூடப்பட்டதை அடுத்து கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கும் பொருட்கள் மற்றும் எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்குவது குறித்த கலந்துரையாடல் கிளிநொச்சியில் அரச அதிபர் இராச நாயகம் தலைமையில் நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள உணவுப் பொருட்கள், எரிபொருள் விபரங்கள் ஆராயப்பட்டன.

பல கூட்டுறவுச் சங்கங்களின் உணவு மற்றும் எரிபொருட்கள் முடிவடையும் நிலையில் உள்ளதாக கூட்டுறவுச் சங்கங்களின் முகாமையாளர்கள் அரச அதிபருக்குத் தெரிவித்தனர்.

பல கூட்டுறவுச் சங்கங்களில் எரிபொருட்கள் முடிந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்திலிருந்து பெருமளவு மக்கள் கிளிநொச்சி மாவட்டத்துக்கு இடம்பெயர்ந்துள்ளதன் காரணமாகவே உணவுப் பொருட்கள், எரிபொருட்கள் முடிவுடையும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

மா, சீனி,பருப்பு, குழந்தைகளுக்கான பால்மா, எரிபொருள், தீப்பெட்டி ஆகிய அத்தியாவசியப் பொருட்கள் வாகனங்களில் கிளிநொச்சி மாவட்டத்துக்கு எடுத்து வருவது தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப் பட்டது.

# சின்னஞ்சிறு செய்திகள்

## பழுதடைந்த உணவு பொருட்கள் அழிப்பு

கிளிநொச்சி —

தமிழீழ சுகாதார சேவையினரும், கிளிநொச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு பொதுச்சுகாதார பரிசோதகரும் இணைந்து கிளிநொச்சி நகரப்பகுதியில் திடீர் சோதனைகளை மேற்கொண்டனர்.

உணவகம், தேனீர்ச்சாலை, குளிர்பான நிலையம், அழகக நிலையங்கள் ஆகியவற்றில் சோதனை மேற்கொண்டனர். அத்தோடு சுகாதார விழிப்புணர்வு கருத்துக்கள் வழங்கப்பட்டதுடன், சுகாதாரத்துக்கு ஊறு விளைவிக்கின்ற பழுதடைந்த உணவுப் பொருட்களையும் அழித்தமை குறிப்பிடத்தக்கது. (கு)

## ஓவியர்களுக்கான ஒன்றுகூடல்

கிளிநொச்சி—

வன்னி மண்ணில் ஓவியத் துறைசார் செயற்பாடுகளை முன்னெடுக்கவும், துறைசார் கற்கை பற்றி கலந்துரையாடவும் தமிழீழ நுண்கலைத் துறையினர் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரியில் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்தச் சந்திப்பில் சித்திர ஆசிரியர்கள் ஆர்வமுள்ள, மாணவர்கள், ஓவியர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

## முன்பள்ளி திறப்புவிழா

பூநகரி—

பூநகரியில் செட்டியார் தரைவெளி குடியிருப்பில் பாடசாலை செல்லாத சின்னஞ்சிறார்களுக்கான முன்பள்ளித் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

முகாம் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொது மக்கள் பலர் கலந்துகொண்டனர். (கு)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்!

கிளிநொச்சி —

கிளிநொச்சி மாகாண சுகாதார பிரதிப் பணிப்பாளர் பணிமனையின் விசர்நோய் தடுப்பு பிரிவினரும், தமிழீழ சுகாதார சேவையினரும் இணைந்து அக்கராயன், கந்தபுரம் ஆகிய இடங்களிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றினர்.

இதில் 80 வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டதுடன், சுகாதார கருத்துரைகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (கு)

# கிளிநொச்சி – ஆலடி கிராமத்தில் பொதுநோக்கு மண்டப திறப்புவிழா

கிளிநொச்சி —

கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஆலடி கிராம பொதுநோக்கு மண்டபத் திறப்புவிழா நேற்றுமுன் தினம் காலை 10.30 மணியளவில் நடைபெற்றது.

நிறுவன இணைப்பாளர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - மங்கள விளக்கை கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன உபதலைவர் தர்மசூரியர், வட்டக்கச்சி பிரதேச விசேட சிறப்பு வேலைத்திட்டப் போராளிகள் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தேசியக் கொடியை வட்டக்கச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் திருமாறன் ஏற்றி வைத்தார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியை கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் சி. சிறிறஞ்சினி, கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனக் கொடியை கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வுப் பணியாளர் சி.பவானி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

பொதுநோக்கு மண்டப பெயர்ப் பலகையை கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன செயலாளர் குமாரசாமி திரைநீக்கம் செய்து வைத்தார். பொதுநோக்கு மண்டபத்தை கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனப் பொருளாளர் இராசேந்திரம் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சிறப்புரையை வட்டக்கச்சி பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் திருமாறன், நிறுவன செயலாளர் குமாரசாமி ஆகியோர் நிகழ்த்தினர். நன்றியுரையை சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுத் தலைவர் தங்கேஸ்வரி நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் ஒக்ஸ்பாம் நிறுவன நிதியுதவியுடன் கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தால் 100 கதிரைகள் சமூக பொருளாதார அபிவிருத்தி குழுக்களுக்கு வருமான அதிகரிப்புக்காக அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் ஒக்ஸ்பாம் நிறுவன நிதியுதவியுடன் இந்தப் பொது நோக்கு மண்டபம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

# அச்சமூட்டும் இராணுவ செயற்பாடுகளால் பளைப் பிரதேச மக்கள் இடம்பெயர்வு!

பளை—

பளைப்பிரதேச மக்கள் தொடர்ச்சியாக இடம் பெயர்ந்த வண்ணம் உள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் முகமாலை முன்னரங்க சோதனைச்சாவடி படையினரால் மூடப்பட்டு பெருமளவான படையினரும், கனரக வாகனங்களும் குவிக்கப்பட்டதையடுத்து பளை, இத்தாவில், அரசர்கேணி மற்றும் இராணுவ முன்னரங்க நிலைகளை அண்டிய கிராமங்களில் இருந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் தொடர்ச்சியாக இடம்பெயர்ந்து வருகின்றன.

இவ்வாறு இடம் பெயர்ந்த மக்கள் இயக்கச்சி, கோவில்வயல் ஆகிய பாடசாலைகளிலும் பரந்தன், கிளிநொச்சி ஆகிய இடங்களிலும் தஞ்சம் அடைந்துள்ளனர். நேற்று முன்தினம் இரவு 9 மணி வரைக்கும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

இதேவேளை, முகமாலை சோதனைச்சாவடி ஊடாக பயணிக்க இருந்த 370 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் பளை மத்திய கல்லூரி, தமிழர் புனர்வாழ்வுக்கழக உடனடிப்புனர்வாழ்வுச் செயலகம் மற்றும் உறவினர் வீடுகள் என்பவற்றில் தங்கியுள்ளனர்.

இரவும் தொடர்ச்சியாக பதற்றமான சூழ் நிலை நிலவி வருவதால் துவிச்சக்கர வண்டிகளிலும், கால்நடையாகவும், வாகனங்கள் மூலமும் பெருமளவான மக்கள் இடம் பெயர்ந்த வண்ணம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (110)

# பெண்கள் உட்பட 100 இற்கு மேற்பட்டோர் விடுதலைப் போராட்டத்தில் இணைவு!





முல்லைத்தீவு—

முல்லைத்தீவு - யோகபுரம் பிரதேசத்தில் சமகால அரசியல் நிலைப்பாடு தொடர்பான கலந்துரையாடலை அடுத்து 19 பெண்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டனர்.

நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு யோகபுரம் மகாவித்தியாலய மண்டபத்தில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், போர் எழுச்சிக்குழுக்கள், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் ஆகியோருக்கானஇன்றைய சமகால அரசியல் நிலைப்பாடு தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில் அரசியல் நிலைப்பாடு தொடர்பான கருத்துக்களை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு. ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் ஆகியோர் வழங்கியதை அடுத்து 19 பெண்கள் உட்பட நூற்றிக்கும் மேற்பட்டோர் வயது வேறுபாடின்றி தம்மை விடுதலைப் போராட்டத்தில் இணைந்துக் கொண்டனர்.

இதேபோன்று, கடந்த வாரம் கிளிநொச்சியில் 60 இற்கும் மேற்பட்டோரும், பளை பிரதேசத்தில் 120 இற்கும் மேற்பட்டோரும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வயது வேறுபாடின்றி இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்
- திருக்குறள்

## நமது நோக்கு

# முன்னெச்சரிக்கை

இராணுவ தலைமையகத்தில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலை அடுத்து- விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கான அனைத்து நுழைவாசல்களையும் அரசாங்கம் அதிரடியாக மூடியது.

இந்த நடவடிக்கையின் போதுதான் பல உண்மை நிலவரங்கள் வெளிவந்தன. குடாநாட்டிலும், வன்னியிலும் உள்ள எரிபொருள், உணவு போன்ற அத்தியாவசியப் பொருட்களின் கையிருப்பு எந்தளவுக்கு பலவீனமாக இருக்கிறதென்பது தெரியவந்துள்ளது.

ஏ9 வீதியை மூடிய அடுத்த நாளே தம்மிடம் எரிபொருள் கையிருப்பு இல்லை என்று கூறிய மின்சார சபை- ஆறு மணி நேரம் மட்டுமே மின் விநியோகம் வழ ங்க முடியும் என அறிவித்தது.

அரச அதிபர் ஏனைய அதிகாரிகளுடன் ஆராய்ந்து விட்டு உணவுக்கையிருப்பு இல்லாதிருப்பது குறித்தும், ஏனைய அத்தியாவசியப்பொருட்களின் பற்றாக் குறை நிலை குறித்தும் தகவல் வெளியிட்டார்.

ஆக, ஏ9 வீதி மூடப்பட்டால் அடுத்த கட்டமாக ஒரு சில நாட்களுக்குக் கூட தாக்குப்பிடிக்க முடியாத கட்டத்தில்தான் குடாநாட்டின் நிலைமை உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அரச நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் உள்ள எரிபொருள், மின்சார, உணவு விநியோக பணிகள் இந்தளவுக்கு மோசமான கட்டத்தில் இருப்பது மிகவும் ஆபத்தான அறிகுறியாகும்.

எதிர்காலத்தில் இவ்வாறானதொரு நிலை ஏற்படாமல் தவிர்க்க வேண்டிய பொறுப்பும், கடமையும் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் அனைவருக்கும் உள்ளது.

ஒருநாள் வீதித்தடை அமுலானவுடன்- எரிபொருட்கள் விநியோகம் தடைப்பட்டதுடன், இருக்கும் எரிபொருட்களும் பதுக்கப்பட்டது. மின்விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டது.

கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் காணாமலேயே போயின. ஒரு நாளில் இந்த மாற்றம் நிகழ்ந்ததென்றால்- ஏ9 வீதியூடான பயணங்கள் சில நாட்கள் தடைப்பட்டுப் போனால் குடாநாட்டின் நிலை என்னவாகும்?

எனவே, வரமுன்காப்பதே சிறந்ததென்ற முதுமொழி போல குடாநாட்டில் அத்தியாவசியப்பொருட்களின் கையிருப்பை பேணுவதும், அவற்றை எந்த நெருக்கடியாயினும் மக்களுக்கு சீராக கிடைப்பதை உறுதி செய்வதும் அரச நிர்வாகக்கட்டமைப்பின் கடமையாகும்.

அதேவேளை, மின்வெட்டு என்ற பெயரில் ஓரிரண்டு நாட்களில் குடாநாட்டு மக்கள் பெரும் திண்டாட்டத்தை அனுபவிக்க நேரிட்டது. குறிப்பிட்ட நேரத்தை அறிவித்துவிட்டு அந்த நேரத்துக்குக் கூட மின் விநியோகம் வழங்கப்படாததால் அத்தியாவசிய சேவைகள் ஸ்தம்பிதமடைய நேரிட்டது.

இனிவரும் காலங்களில் மின்வெட்டு, சுழற்சி முறை விநியோகம் என்று நடைமுறைப்படுத்தும் போது, அந்தக் குறுகிய காலத்திலாவது பொது மக்கள் நிறைவான சேவையை பெற்றுக்கொள்வதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

எரிபொருள் விநியோகத்திலும் சரி, உணவுப் பொருள் விநியோகத்திலும் சரி முறையான செயற்திட்டம் வகுக்கப்படுவது அவசியம். அதன் மூலமே அத்தியாவசியத்தேவைகளை நிறைவு செய்வதற்கு ஏதுவாக இருக்கும்.

ஒன்றரை நாட்கள் ஏ9 வீதி மூடப்பட்ட போதே ஏதோ யுத்தத்துக்குள் மூழ்கி விட்டதான உணர்வு குடாநாட்டு மக்களுக்கு ஏற்பட்டது.

இந்தக்குறுகிய காலத்துக்குள் பலரும் அனுபவித்த துன்பங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. ஆனால், இந்த ஏ9 விதி பயணம் எவ்வளவு காலம் நீடிக்கும் என்றோ, யுத்தம் வராது என்றோ எவரும் நிச்சயிக்க முடியாத நிலைதான் உள்ளது.

எனவே, எதிர்காலத்தில் குடாநாட்டு மக்கள் எத்தகைய நெருக்கடிகளையும் எதிர்கொள்ளும் தயார்படுத்தல்களோடு இருக்கவேண்டும் என்பதற்கான, முன்னெச்சரிக்கையாகக் கூட இந்தச்சம்பவத்தை எடுத்து கொள்ளலாமே!

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

நாடும் நடப்பும்



# இலங்கையின் அசாதாரண நிலைமை

# ராமேஸ்வரம் கடற்பகுதியில் கண்காணிப்பு

இராமேஸ்வரம்

இலங்கையில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலை அடுத்து ராமேஸ்வரம் கடற்கரையில் இந்தியக் கப்பல் மற்றும் ஹெலிகொப்டரும் ரோந்து நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியுள்ளதாக தமிழகத் தகவல்கள் தெரிவித்தன. இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது-

இலங்கையில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலை அடுத்து தமிழர்கள் அகதிகளாக தமிழ் நாட்டுக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் தமிழகக் கடலோர காவல்படை உஷார் படுத்தப்பட்டுள்ளதுடன், எல்லையிலும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது 24 மணி நேரம்ரோந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், இந்திய கடற்படைக்கு சொந்தமான ரோவர் என்ற கப்பலும் ராமேஸ்வரம் கடற்பகுதியில் ரோந்தில் ஈடுபட்டுள்ளது. சந்தேகத்துக்கிடமான வகையில் கடலில் நடமாடும் படகுகள் தடுத்து நிறுத்தப்பட்டு தீவிர சோதனையின் பின்னரேயே செல்வதற்கு அனுமதிக்கப்படுகின்றன.

இதேபோன்று, இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டரும் கடலாடி பகுதியில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டதுடன், ராமேஸ்வரம் பகுதியில் தாழ்வாகப் பறந்து பாதுகாப்பு பணியில் ஈடுபட்டது. இதுபோல ராமநாதபுரம் மாவட்ட பொலிஸ் அதிகாரியும். கடற்கரையிலிருந்து நகருக்குச் செல்லும் அனைத்து வீதிகளும் சீல் வைக்கப்பட்டுள்ளன. அங்கு சோதனைச் சாவடிகளும் அமைக்கப்பட்டு அனைவரும் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் அத்துடன் ஆயுதம் தாங்கிய பொலிஸாரும் வாகனங்களில் ரோந்தில் ஈடுபட்டுள்ளனர்.

ராமேஸ்வரம், தங்கச்சிமடம், பாம்பன்மண்டபம் பகுதிகளிலும் பொலிஸார் 24 மணிநேரமும் உஷார் நிலையில் இருக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளனர்.

# ஜெனிவா பேச்சுக்கான வழிமுறைகளை கண்டறியுமாறு சொல்ஹெய்ம் கோரிக்கை



ஒஸ்லோ

ஜெனீவா பேச்சுக்களைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறியுமாறு அரசாங்கத்தையும், விடுதலைப் புலிகளையும் நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜெனீவா பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு நாங்களும் பெரு முயற்சிகளை மேற்கொண்டுவருகிறோம். எனினும், தற்போது மிகவும் மோசமான நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக இந்தியாவுடனும் விவாதித்துவருகிறோம்.

போர்நிறுத்த உடன்படிக்கைக்குப் பின்னர் மோதல்கள் மிகவும் மோசமான கட்டத்தை எட்டியுள்ளது. இருந்தபோதிலும் சமாதான நடவடிக்கை முழுமையாக நழுவிப்போகவில்லை.

இரண்டு தரப்பினருடனும் தொடர்பில் உள்ள நாம் எமது பணிகளை முன்னெடுத்து வருகிறோம் எனத் தெரிவித்தார்.

# கரவெட்டி பிரதேச செயலகத்தின் கலை, இலக்கிய போட்டி முடிவுகள்

வடமராட்சி

கரவெட்டிப் பிரதேச செயலகத்தால் 2006 ஆம் ஆண்டு தேசிய கலை இலக்கியப் பெருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கட்டுரை, கவிதை, சிறுகதை விமர்சனம் ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் விபரங்களைப் பிரதேச செயலகம் வெளியிட்டுள்ளது.

இந்தப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் விபரங்கள் வருமாறு -

**கட்டுரை கனிஷ்ட பிரிவு**

1 ஆம் இடம்: துர்க்கா ஜெயரட்ணம் (யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), 2 ஆம் இடம்: சகானா செல்வரத்தினம் (யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), 3 ஆம் இடம்: சூரியதாட்சாயினி (யாழ். விக்னேஸ்வராக் கல்லூரி), ரவிச்சந்திரிக்கா நவரத்தினம் (யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்).

**கட்டுரை சிரேஷ்ட பிரிவு**

1 ஆம் இடம்: யூடிற்பாமினி பாலேந்திரன் (யாழ். விக்னேஸ்வராக் கல்லூரி), 2 ஆம் இடம்: சித்திராங்கி செல்வச்சோதி (யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம்: அஞ்சனா இராஜகுலேந்திரம் (யாழ். விக்னேஸ்வராக் கல்லூரி).

**கவிதை மட்டுப்படுத்தப்பட்ட பிரிவு**

1 ஆம் இடம்: இராசகுமாரன் மயூரன் (ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரம அறநெறிப் பாடசாலை), 2 ஆம் இடம்: பு.ஜீவனா (யாழ்.விக்னேஸ்வராக் கல்லூரி), 3 ஆம் இடம்: நாகேந்திரராஜா வினோத் (யாழ். கரணவாய் பொன்னம்பல வித்தியாலம்).

**கவிதை திறந்த பிரிவு**

1 ஆம் இடம்: கணபதிப்பிள்ளை முத்துவேல் (இமையாணன் கிழக்கு), 2 ஆம் இடம்: பத்தினிப்பிள்ளை வல்லிபுரம் (துன்னாலை மத்தி), உஷாதேவி செல்வச்சோதி (சமரபாகு), திருமதி கவிதா தவேஸ்வரன் (நெல்லியடி வடக்கு).

**சிறுகதை மட்டுப்படுத்தப்பட்டது**

1 ஆம் இடம்: வல்லிபுரம் ரமணன் (யாழ். விக்னேஸ்வராக் கல்லூரி), 2 ஆம் இடம்: சுகிர்தா செல்லையா (ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரம அறநெறிப் பாடசாலை) , 3 ஆம் இடம்: துளசிகா விஜயபாகு (செல்வபுரம் நாகசக்தி அறநெறிப் பாடசாலை).

**சிறுகதை திறந்த பிரிவு**

1 ஆம் இடம்: சி.செகராசசிங்கம் (அல்வாய்), 2 ஆம் இடம்: திருமதி த.கவிதா (நெல்லியடி வடக்கு), 3 ஆம் இடம்: திரு.க.பாலன் (இமையாணன்).

**சிறுகதை விமர்சனம்**

1 ஆம் இடம்: சி.சிவநந்தினி (யாழ். விக்னேஸ்வராக் கல்லூரி), 2 ஆம் இடம்: சி.விதுஷா (யாழ். வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

**கவிதை விமர்சனம்**

1 ஆம் இடம்: இ.கவிதா (யாழ். விக்னேஸ்வராக் கல்லூரி), 2 ஆம் இடம்: ந.சூரியா (யாழ். வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), 3 ஆம் இடம்: இ.சிவரேகா (யாழ். வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

**எழுந்தமான கவிதை**

1 ஆம் இடம்: க.முத்துவேலு (இமையாணன் கிழக்கு), 2 ஆம் இடம்: ப.வல்லிபுரம் (துன்னாலை மத்தி), 3 ஆம் இடம்: த.கிருபாகரன் (கரவெட்டி மத்தி).

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி? 28.04.2006 - 04.05.2006

| | | | |
|---|---|---|---|
| புத, ராகு | சூ,சந் | | செவ் |
| சுக் யுரே | 28 கா. 6 - 41 மீன - சுக்<br>28 பி.கு 5- 16 இட - சந்<br>01 ப. 9 - 44 மிது - சந்<br>02 கா. 6- 22 மே - புத<br>03 மா. 6- 00 கட - சந் | | சனி |
| நெப் | | | |
| | | குரு | கேது |

## மேடம்

(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் கால்)



மேடராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், எதிர்பாராத பணவருவாய் கிடைக்கும். புத்திரர்களாலும், உறவினர்களாலும் உதவிகள் உண்டு. வீட்டில் சுப நிகழ்வுகள் நடைபெறும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். விவாகம் முதலிய மங்கள கருமங்கள் சிறப்பாக நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் வரவேற்பு அதிகமாக இருக்கும். மேலதிகாரிகளின் பாராட்டுக்கள் கிட்டும். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் அமோகமாக இருக்கும். முதலீடுகளில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். வங்கி உதவிகளும் உண்டு. புதிய முதலீடுகளுக்கு நன்று. தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் இருந்து கொண்டிருக்கும். வருமானம் சிறக்கும். மாணவர்களுக்கு கல்வி உயர்ச்சி பரீட்சைகளில் சித்தி உண்டு.

## இடபம்

(கார்த்திகை 2,3,4 ரோகினி, மிருகசீரிடம் 1,2)



இடபராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்க்கையில் மனக்கஷ்டங்கள் தென்படும். பிரயாசைக்கேற்ற பண வருவாய் கிடையாது. எதிர்பாராத செலவுகள் வந்து சேரும். தேகசுகம் பாதிக்கப்படுவதால் வைத்தியச் செலவு அதிகமாகும். புத்திரர்களால் தொல்லைகள் ஏற்படும். திருமண கருமங்கள் தடைப்படும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். சக உதவிகள் குறையும். மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். பிரயாணங்களில் கஷ்டங்கள் ஏற்படும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலை காட்டும். முதலீடுகள் விற்பனையாகாமல் தேங்கிக்கிடக்கும். வாடிக்கையாளர்களின் வரவு குறையும். தொழிலாளர்களுக்குத் தொழில் வாய்ப்புகள் குறையும். வேலைகளில் எதிர்பார்த்த லாபம் கிடையாது. மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் இராது. பரீட்சைகள் திருப்தியளிக்காது.

## மிதுனம்

(மிருகசீரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3)



மிதுனராசியில் பிறந்தவர்களுக்கு இல்லறம் நல்லறமாக நடக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். எடுத்த கருமங்கள் தங்கு தடையின்றி நிறைவேறும். புத்திரர்களாலும், உறவினர்களாலும் நன்மைகள் கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து பணவரவு கிடைக்கும். விவாகம் முதலிய கருமங்கள் மனம் போல் நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு மதிப்பு கௌரவம் உயரும். அதிகாரிகள் அனுசரணையாக இருப்பர். சம்பள உயர்வு கைக்கு வந்து சேரும். மகிழ்ச்சி பொங்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். வாடிக்கையாளர்களின் வரவு அதிகமாக இருக்கும். நிதி நிலைமை திருப்திதரும். நகை வியாபாரிகள் அதிக லாபம் பெறுவர். தொழிலாளர்களுக்கு செய்தொழில் ஊக்கம் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகும். மாணவர்கள் கல்வியில் முன்நிலை வகிப்பர். உயர் கல்வி வாய்ப்புகள் உண்டு.

## கடகம்

( புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)



கடகராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப நிலை நன்றாக இருந்தாலும், இடையிடையே தொல்லைகள் ஏற்படும். பணவருவாய் தேவைக்குத்தக்களவு இருக்கும். புத்திரர்களால் அதிக நன்மை கிடையாது. தொடங்கும் கருமங்கள் தாமதத்தின் மேல் நிறைவுபெறும். தேகசுகத்தைப் பேணவேண்டும். விவாகம் முதலிய கருமங்கள் தாமதத்தை ஏற்படுத்தும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புகள் அதிகமாயினும், சக உதவிகளுடன் சமாளிக்க முடியும். உத்தியோக வாய்ப்புகள் தள்ளிப்போகும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக நடக்கும். அழகு சாதனப் பொருட்கள் விற்பனை செய்வோர் அதிகலாபம் பெறுவர். முதலீடுகளுக்கு நிதி பற்றாக்குறை இருக்கும். தொழிலாளர்களுக்கு அலைச்சல் இழுபறி கூடுதலாக ஏற்படும். இயந்திர சாதனங்களும் தொல்லை கொடுக்கும். மாணவர்களுக்கு முயற்சிக்கேற்ப பெறுபேறுகள் கிடைக்கும்.

## சிங்கம்


( மகம், பூரம், உத்தரம்1)



சிங்கராசில் பிறந்தவர்களுக்குடும்ப வாழ்க்கையில் முன்னேற்றமுண்டு. தொழில் பணவருவாய் நன்கு அமையும். தொடங்கும் கருமங்கள் விரைவில் வெற்றியடையும். உறவினர்களிடத்தே ஒற்றுமை வலுக்கும். தேகசுகம் பாதிப்படையாது. பெரியோர்களின் அனுசரணை உண்டு. விவாக முதலிய மங்கள கருமங்கள் விரைவில் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு பொது மக்கள் மத்தியில் மதிப்பு உயரும். மேலதிகாரிகளின் அனுசரணையும் கிடைக்கும். போக்குவரத்துக்கள் இலகுவாகும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். இலாபம் ஓரளவு உண்டு. அலங்காரப் பொருட்கள் விற்பனை செய்வோர் லாபமடைவர். தொழிலாளர்களுக்கு தொழில் மூலம் நல்ல வருமானம் உண்டு. புதிய தொழில்கள் கிட்டும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் மிகும். பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் கிட்டும்.

## கன்னி

(உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2)



கன்னிராசியில் பிறந்தவர்களுக்கு பல சிரமங்கள் குடும்பத்தில் ஏற்படும். பணவருவாய் போதாமல் இருக்கும். தொழில்களில் பிரயாசை கூடுதலாக இருக்கும். தேகசுகம் இடையிடையே பாதிப்படையும். எதிர்பாராத பல நெருக்கடிகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும். விவாகம் முதலிய மங்கள கருமங்கள் கைகூடாது. உத்தியோகத்தர்களுக்கு பல பொறுப்புக்கள் சுமத்தப்படும். போக்குவரத்துக்களிலும் சிரமங்கள் ஏற்படும். அதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். மனநிம்மதி இருக்காது. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த நிலை காட்டும். எதிர்பார்த்த லாபம் கிடையாது. பொதுவாக நிதிப்பற்றாக்குறை இருந்து கொண்டிருக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் குறையும். பிரயாசைக்கேற்ப லாபம் கிடையாது. மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறையும். பரீட்சை திருப்தி தராது.

## துலாம்

(சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3)



துலாராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப நிலை நன்றாக இருந்தாலும், இடையிடையே கருத்து வேறுபாடுகளும் இருக்கும். தொடங்கும் கருமங்கள் தாமதமாகவே நிறைவேறும். புத்திரர்களால் பெரிதாக உதவி கிடையாது. பணவருவாய் குறைவாகவே இருக்கும். சிக்கனத்தைக் கடைப்பிடித்தல் நன்று. விவாக கருமங்கள் தாமதமாகவே கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புகள் அதிகமாயினும், சக ஊழியரின் உதவியுடன் சமாளிக்க முடியும். அதிகாரிகளின் போக்குக்கேற்ப நடந்துகொள்வது நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மத்திமமாகவே நடக்கும். வாடிக்கையாளர்களைக் கவரத்தக்கவாறு செயற்பாடுகளைச் செய்ய வேண்டும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் குறைவாகவே இருக்கும். எனினும் முயற்சிக் கேற்பலாபம் கிட்டும். மாணவர்களுக்கு கூடுதல் முயற்சி தேவை.

## விருச்சிகம்

( விசாகம் 4, அனுஷம், கேட்டை)



விருட்சிகராசியில் பிறந்தவர்களுக்கு இந்த வாரம் பல சிறப்பான பலன்கள் நடக்கும். குடும்பத்தில் குதூகலம் நிலவும். திடீர் வருமானம் கிடைக்கும். புத்திரர்களாலும், உறவினர்களாலும் உதவிகள் கிட்டும். வீட்டில் சுப நிகழ்வுகள் நடக்கும். விவாகம் மனம் போல் சிறப்பாக நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு கௌரவம், மதிப்பு அதிகமாகும். அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வு ஏற்படலாம். வியாபாரிகளுக்கு அமோக விற்பனை நடக்கும். அதிகலாபம் கிடைக்கும். புதிய முதலீடுகளுக்கும் நன்று. வங்கி உதவிகள் உண்டு. தொழிலாளர்களுக்கு பலவகையாலும் நன்று. தொழில்மூலம் அதிகலாபம் பெறுவர். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றமடையும். சிலருக்கு தொழில் வாய்ப்பு கிட்டும்.

## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம், 1)



தனுசுராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பொருளாதாரம் திருப்தியாக இருக்கும். எடுக்கும் முயற்சிகள் வெற்றிதரும். நண்பர்கள், உறவினர்களின் உதவி உண்டு. குடும்பப் பெண்கள் உற்சாகமாக விளங்குவர். மங்கள கருமங்கள் விரைவில் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகள், சக ஊழியர் ஒத்துழைப்பு கிடைக்கும். செல்வாக்கு பெருகும். சிலருக்கு சம்பள உயர்வுகள் கிட்டும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் விற்பனையாகி, பணம் சேரும். வங்கி உதவிகளும் வந்து சேரும். கடன் நிலுவைகள் வரும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் உண்டு. இயந்திரங்கள் மூலம் தொழில் செய்வோர் கூடிய லாபம் பெறுவர். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கமும், பரீட்சைகளில் சித்தியும் உண்டு.

## மகரம்

( உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2)



மகரராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்க்கையில் பிரச்சினைகள் தோன்றும். புத்திரர்களால் தொல்லைகள் அதிகரிக்கும். வருவாயிலும் பார்க்க செலவுகள் அதிகமாகும். குடும்பப் பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடித்தல் நன்று. உறவினர்களிடையேயும் கருத்து வேறுபாடுகள் தோன்றும். சிலருக்கு வழக்குகள் ஏற்படலாம். விவாகம் முதலிய மங்கள கருமங்கள் தடைப்படும். உத்தியோகத்தர்களுக்கு பலவித சிரமங்களைச் சமாளிக்க வேண்டியிருக்கும். வேலைப் பளுவும் அதிகமாகும். சம்பள உயர்வு தாமதமடையும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடைக்கும். நிதிப்பற்றாக் குறை நிலவும். வங்கி உதவிகள் கிடையாது. தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்பு குறையும். இயந்திரங்கள் ஒத்துழைக்காமல் செலவை ஏற்படுத்தும். மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறையும்.

## கும்பம்

( அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3)



கும்பராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்க்கை நன்றாக இருந்தாலும், கணவன், மனைவியிடையே கருத்து வேற்றுமைகள் காட்டும். செலவுகள் கட்டுப்படுத்த முடியாதவாறு அதிகரிக்கும். கருமங்கள் கைகூடுவதில் கடின முயற்சி எடுக்கவேண்டும். பொறுமையும் வழிபாடும் அமைதியைக் கொடுக்கும். உத்தியோகத்தர்கள் தமது பணிகளைச் செவ்வனே ஆற்றுவது நன்மைதரும். சக ஊழியர்களின் உதவி உண்டு. பதவி உயர்வுகள் தாமதப்படும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் குறைந்த பட்ச லாபமே கிடைக்கும். வாடிக்கையாளருடன் பொறுமையைக் கடைப்பிடித்தல் நன்று. தொழிலாளர்களுக்கு கடும் முயற்சி தேவை. அலைச்சல் பிரயாசை ஏற்பட்டாலும், லாபமுண்டு. மாணவர்களுக்கு கல்வியில் கூடிய முயற்சி எடுக்க வேண்டும்.

## மீனம்

( பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி)



மீனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்க்கையில் மன நிம்மதி கிடைக்கும். தொடங்கும் கருமங்கள் வெற்றியளிக்கும். பொருள் வருவாய் திருப்தியாக இருக்கும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். விவாக கருமங்கள் பெரும்பாலும் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். அதிகாரிகளின் அனுசரணை உண்டு. பொதுசன மத்தியில் வரவேற்பு இருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். ஆடை வியாபாரிகள் கூடுதல் லாபம் பெறுவர். வங்கி உதவிகள் கிடைக்கும். தொழிலாளர்களுக்கு லாபம் அதிகரிக்கும். விஞ்ஞான தொழில் நுட்பங்கள் கூடுதல் பயனளிக்கும். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவர். பரீட்சையில் சித்திபெறுவர். சிலருக்கு வெளிநாடு செல்ல வாய்ப்புண்டு.

# தொண்டர் ஆசிரியர்களின் துன்பம் தொடர வேண்டுமா?

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள அரச பாடசாலை களில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவியமையால் படித்த பல இளைஞர்களும் யுவதிகளும் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி வந்தார்கள், வருகின்றார்கள் என்பதை அனைவரும் அறிவார்கள்.

இந்தத் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கு அரசும் அரசு சார்ந்த உரிய அதிகாரிகளும் பல புதிய நிபந்தனைகளை விதிப்பதுடன் தட்டிக் கழித்தும் வருகின்றார்கள்.

தொண்டர் ஆசிரியர் களுக்கு அரசு விதிக்கும் புதிய நிபந்தனைகளுள் ஒன்று 1.1.2001 ஆம் ஆண்டு தொடக்கம் 1.1.2004 ஆம் ஆண்டுக்குள் தொடர்ச்சியாக மூன்று வருடங்களைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்பதாகும்.

## வாசகர் நோக்கு

1.1.2004 ஆம் ஆண்டுக்குள் மூன்று வருடத்தைப் பூர்த்தி செய்து இன்றுவரை தொடர்ச்சியாக மூன்று வருடத்துக்கும் மேலாகச் சேவையாற்றிக் கொண்டிருக்கும் தொண்டர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனத்தை வழங்கி இனிவரும் காலங்களிலும் இந்தத் தொண்டர் ஆசிரியர்களின் அவலநிலை தொடராத வண்ணம் தடுப்பதற்கு உரிய அதிகாரிகள் நட வடிக்கை எடுப்பார்களா?

இந்த நிலை தொடர விட்டால் வெற்றிடம் உள்ள பாட சாலைகளில் புதிது புதிதாகத் தொண்டர் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு, எமது எதிர்காலத்தைப் பாழாக்கியது மாதிரி அவர்களது எதிர்காலத்தையும் பாழாக்கலாம் என்ற நோக்கில்தானா இந்த நிலையைத் தொடரவிடுகின்றார்கள்?

**பாதிக்கப்பட்ட**
**தொண்டர் ஆசிரியர்.**

| | | |
|---|---|---|
| சஞ்சிகையின் பெயர் | :- | அருள் ஒளி |
| வெளியீடு | :- | ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் |



தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தால் வெளியிடப் படும் அருள் ஒளி சஞ்சிகையில் பொன் விழாக் காணும் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம் பந்த பரமாச்சாரி சுவாமிகளின் படத்தை அட்டைப்படமாகத் தாங்கி வெளிவந்துள்ளது இதழில் பொன் விழாக் காணும் நல்லை ஆதீன குரு முதல்வரை வாழ்த்துவோம், வணங்குவோம் என்று குருமுதல்வர் பற்றிய வாழ்க்கை வரலாறு இடம் பெற்றுள்ளது.

**மகரம்.**

பெண் வழிச்சேறல் ஒரு புதிய பார்வை என்பது பற்றி பேரறிஞர் முருகவே பரமநாதனும், நேர்மையான வாழ்வு என்று தலைப்பில் அருட் சகோதரி ஜதீஸ்வரியும், சிவன் அருட் கதைகள் பற்றி மாதாஜியும், உள்ளத்தின் உண்மை ஒளி நன்மை பெருக்கும் என்ற தலைப்பில் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரத்தினது பல கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

மொத்தத்தில் அழகிய முறையில் அச்சிடப்பட்டு வெளி வந்துள்ள அருள் ஒளி சஞ்சிகையை சைவ மக்கள் அனை வரும் படித்துப் பயன் பெறவேண்டும்.

# அரச பகுதியில் அதிகரித்து வரும் படுகொலைகளை சர்வதேச சமூகம் கண்டிப்பதற்குத் தவறி விட்டது!

## யாழ். பொது அமைப்புகளின் ஒன்றியம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் —

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இராணுவத்தினரும், ஒட்டுக்குழுக்களும் இணைந்து தமிழினப்பற்றாளர்களையும், சமூகத் தொண்டர்களையும் திட்டமிட்டு படுகொலை செய்வதை சர்வதேச சமூகம் அரசைக் கண்டிக்காதிருப்பதனால் தான் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

திருகோணமலை மாவட்டம் மூதூரில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் விமானத்தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. அப்பாவிப் பொது மக்கள் 16 பேர் பலியாகியும், 27 பேர் படுகாயமடைந்தும் உள்ளனர். இந்தச் செயலை யாழ்.மாவட்டப் பொது அமைப்புகளின் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்போடு உருவாக்கப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தை இல்லாமல் செய்து தமிழ் மக்களையும், தமிழீழ விடுதலைப்புலிகளையும் ஒரு பயங்கரமான போர்ச்சூழலுக்குள் தள்ளி தமிழினத்தை வலிந்து போருக்குள் திணித்து தமிழினத்தை வேரோடு அழிக்கவே அரசு முயல்கிறது. இதற்கு தனக்கு சார்பாக சர்வதேச சமூகத்தையும் துணைக்கு அழைக்க முயல்கிறது. எனவே இந்த கபடத் தனமான வஞ்சக வலைக்குள் சர்வதேசம் விழுந்துவிடாமல் எமது நியாய பூர்வமான விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும் என வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.

சர்வதேச அனுசரணையுடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும், போர் நிறுத்தத்தையும் மதிக்கின்றோம் என சர்வதேச நாடுகளுக்கு பாசாங்கு காட்டி மனிதப் படுகொலைகளை பழிவாங்கும் நோக்குடன் செய்து வருகின்றது. அரச சிங்கள தேசத்தின் அராஜகத்தை இன்னுமா சர்வதேச சமூகம் விழியொட்டாமல் பார்த்துக்கொண்டிருக்கின்றது என தமிழர்கள் அங்கலாய்க்கின்றனர்.

யுத்தத்தை யுத்தத்தினூடாகவும், மரணத்தை மரணத்தினூடாகவும் சந்திப்பதுதான் வழி என்றால் அரசு ஏன் மறைமுகமான நிழல் யுத்தத்தை நடத்துகிறது?

மாறாக பல எதிர்பார்ப்புக்களுடன் நிம்மதியான வாழ்வை தேடும் அப்பாவி மக்கள் மீது தொடர்ந்தும் கொலைகள், கொள்ளைகள் என அரசு ஈடுபடுகிறது.

அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்ற மக்கள் பாவித்து வந்த போக்குவரத்துப் பாதைகள் எந்தவித முன்னறிவித்தலுமின்றி திடீரென மூடப்பட்டமை அப்பட்டமான மனித உரிமை மீறலாகும். கடந்த இரு நாட்களில் எமது மக்கள் பெரும் துன்பப்பட்டனர்.

அரச பிற்புலத்துடன் ஆயுதப்படைகளும், ஒட்டுக்குழுக்களும் இணைந்து தமிழினப்பற்றாளர்களையும், சமூகத் தொண்டர்களையும் திட்டமிட்டு படுகொலை செய்து வருவதை சர்வதேசம் இன்னும் கண்டிக்காமல் இருப்பது இவ்வாறான கொலைச் செயல்களில் அவர்களை ஈடுபட மேலும் ஊக்கத்தை அளிப்பதாக உள்ளது.

இதுபோன்ற அரச பயங்கரவாத செயல்களை சர்வதேச சமூகம் மௌனமாகப் பாத்துக் கொண்டிருப்பதால் சிங்கள அரசின் கொலைவெறித் தாக்குதல்கள் உச்சநிலையை எட்டியுள்ளது.

ஜனநாயகம், மனித உரிமை, தார்மீகம் என உலகுக்கு போதனை செய்யும் அவ்வழி நின்று கண்டிக்கின்ற அமெரிக்கா அரசைக் கண்டிக்காது அரசுக்கு சார்பாக ஒத்துப்பாடுதல், மனித உயிர்களை மதிக்காத தன்மையை வெளியாக்கி உள்ளன. இதுகுறித்து அமெரிக்கா தமிழீழம் தொடர்பாக கடைப்பிடிக்கும் வெளியுறவுக் கொள்கையை அது மாற்றவேண்டும்.

திருகோணமலை மாவட்ட தாக்குதல் சம்பவங்கள் அரசின் ஒருதலைப்பட்சமான போரின் ஆரம்பமாகவே கருதுகின்றோம். இவை விடுதலைப் புலிகள் மீதான போர் அல்ல மாறாக அப்பாவித் தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு நடவடிக்கைய்ாக கருதுகின்றோம். எனவே இவ்வாறான மனித நேயமற்ற கொலைவெறித்தாக்குதல்களை நிறுத்தி நீதியான, உண்மையான, மனித நேய அடிப்படையிலான உயிர் உடமைக்கான பாதுகாப்பை அரசு வழங்க சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க முன்வர வேண்டும் என தமிழ்மக்களின் சார்பாக யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் மிகவும் தாழ்மையாக் கேட்டுக் கொள்கின்றது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கூட்டணி ஆட்சிக்கு தி.மு.க தயார் ஆனால் தமிழக மக்கள் தயாரில்லை

## வைகோ தெரிவிப்பு



சென்னை —

கூட்டணி ஆட்சிக்கு தி.மு.க தயாராக இருக்கலாம். ஆனால், அதற்கு தமிழக மக்கள் தயார் இல்லை என ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.

மழை, வெள்ளம், சுனாமி உள்ளிட்ட இயற்கை இடர்களின்போது நிவாரணத் தொகை வழங்குவதில் மத்திய அரசு விதித்துள்ள விதிமுறையை மாற்றக் கோரியவர் முதல்வர் ஜெயலலிதா மட்டுமே. வேறு எந்த முதல்வரும் இதற்காக குரல் கொடுக்கவில்லை.


தமிழகத்தில் கூட்டணி ஆட்சி ஏற்படும் என தமிழக முன்னாள் காங்கிரஸ் தலைவர் இளங்கோவன் கூறிய போது அவரை கிண்டலும், கேலியும் செய்த தி.மு.க தலைவர் கருணாநிதி-தற்போது தோல்விப் பயத்தால் கூட்டணி ஆட்சிக்குத் தயார் என்று கூறுகிறார். கூட்டணி ஆட்சிக்கு கருணாநிதி தயாராக இருக்கலாம். தமிழக மக்கள் தயாராக இல்லை.

மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி தி.மு.க தேர்தல் பிரசாரத்துக்கு உதவும் நடவடிக்கையை தேர்தல் ஆணையம் கண்டு கொள்ளாமல் உள்ளது. தி.மு.க தலைவர் கருணாநிதியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தை நவீன வகை கமராக்களுடன், இருந்த இடத்தில் இருந்தே தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பும் உரிமையை பெற்றுத் தந்துள்ளார் தயாநிதி மாறன். மத்திய அமைச்சராக உள்ளவர் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டதை தேர்தல் ஆணையகம் கண்டிக்காதது ஏன்?

குறளோவியம் சங்கத் தமிழ் எழுதிய தி.மு.க தலைவர் கருணாநிதி, தற்போது ஆபாசக் கதைகளை எழுதி வருகிறார். அந்த ஆபாசக் கதைகளில் பாதியை மட்டுமே கூறுகிறார். மீதியைக் கூறுவதில்லை. யசோதர காவியத்தை குறிப்பிட்டு ஆபாசக் கதை கூறிய அவர், அதன் முடிவை கூறாமல் விட்டுவிட்டார். யசோதர காவியத்தில் மகனுக்கு மணிமகுடம் சூட்ட கணவரை விஷம் வைத்துக் கொன்ற முடிவை அவர் கூறவில்லை. இதே நிலையில்தான் கருணாநிதியும் உள்ளார். மகனுக்கு மணிமகுடம் சூட்ட தி.மு.கவை அழித்து வருகிறார் என்றார் வைகோ.

# இந்தியா மாநிலங்கள் அனைத்திலும் 2 ரூபாவுக்கு அரிசி வழங்க தயாரா?

## பிரதமரிடம் கேட்கிறார் அத்வானி



கிருஷ்ணகிரி —

இந்தியா முழுவதும் உள்ள அனைத்து மாநிலங்களிலும் கிலோ அரிசி 2 ரூபாவுக்கு வழங்க பிரதமர் தயாரா? என எல்.கே.அத்வானி கேள்வி எழுப்பினார்.

தேன்கனிக்கோட்டை சந்தைப் பேட்டை திடலில் நடந்த பொதுக்கூட்டத்தில் அவர் பேசியதாவது -

தற்போது தமிழ்நாட்டில் பாரதிய ஜனதாவில் 5 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இந்தஎண்ணிக்கை மேலும் உயர வேண்டும்.

தமிழ்நாட்டை பாரதிய ஜனதா புறக்கணிக்காது. எப்போதும் விட்டுக் கொடுத்ததும் இல்லை. உலக அரங்கிலும் பாரதம் உயர வேண்டும் என்ற உயரிய நோக்கமே பாரதிய ஜனதாவின் குறிக்கோள் ஆகும்.

மத்திய அரசை இயக்கும் பிரதமர் மன்மோகன்சிங் காரை இயக்கும் டிரைவர் போல இருக்கிறார். ஆனால், அந்தக் கார் செல்லும் திசை மற்றும் போக்கை முடிவு செய்பவராக இருப்பவர் சோனியா காந்தி தான். அமெரிக்க ஜனாதிபதி புஷ்சை மன்மோகன்சிங் வரவேற்கிறார். ஆனால், மத்திய அரசின் கூட்டணி கட்சியான கம்யூனிஸ்டுகள் அவரை வெளியே போ என்கிறார்கள். இவ்வாறு மத்தியில் உள்ள காங்கிரஸ் கூட்டணி அரசு முரண்பாட்டின் மொத்த உருவமாக திகழ்கிறது. கொள்கை அடிப்படையில் காங்கிரஸ் அரசு முடிவுகள் எடுக்க தவறி விட்டது.

காங்கிரஸ் கட்சியும், பாரதிய ஜனதாவும் இருதுருவமாக விளங்குகின்றன. அவர்கள் கூட்டணி அரசுக்கும் எங்கள் கூட்டணிக்கும் 7 உறுப்பினர்கள் தான் வித்தியாசம். எனவே, இந்தத் தேர்தலில் எம்மோடு நெருங்கி வந்து ஆட்சியில் பங்கு கொள்ள கூட்டணி கட்சிகள் வெற்றியும், பாரதிய ஜனதா வேட்பாளர்கள் வெற்றியும் மிகமுக்கியமானவை. உயரிய கொள்கைக்காகப் பாடுபடும் அவர்களை ஆதரிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தில் தற்போது அரிசிப் போட்டி அரசியல் நடக்கிறது. ஒரு கட்சி 1 கிலோ அரிசி 2 ரூபாவுக்கு வழங்குவதாக கூறுகிறது. இன்னொரு கட்சி இலவச அரிசி வழங்குவதாக கூறுகிறது. 1 கிலோ அரிசி 2 ரூபாவுக்கு வழங்குவேன் என அறிவித்த கருணாநிதி இது குறித்து மத்திய நிதி அமைச்சர் சிதம்பரத்திடம் கலந்து பேசி விவாதித்தாரா?

எனவே, தமிழகத்தை யார் ஆள்வது என்பதை தீர்மானிப்பதில் மக்கள் தெளிவாக இருக்க வேண்டும். தமிழக சட்டசபைத் தேர்தலுக்குப் பின்பு பாரதிய ஜனதாக் கட்சி எதிர்க்கட்சி வரிசையில் அமரும். அத்தோடு ஆக்க பூர்வமான எதிர்க்கட்சியாகவும் செயற்படும்.

தி.மு.க தலைமையில் கூட்டணி ஆட்சி அமைந்தால் அதில் காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் இடம் பெறக்கூடாது. அது தமிழக நலனுக்கு கேடு விளைவிக்கக் கூடியதாகும். எனவே, தமிழகம் முழுவதும் போட்டியிடும் பாரதிய ஜனதா கட்சி வேட்பாளர்களை வாக்காளர்கள் ஆதரிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# நமது ஈழநாடு சிறுவர் அரங்கம் - துருவன் நடத்திய

## போட்டி முடிவுகள்

### குறுக்கெழுத்துப் போட்டி இல.07

★ முதலாம் பரிசு - செல்வி தர்சி சிவநேசன்
கிளி/ கட்டைக்காடு அ.த.க பாடசாலை
(மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் ரூபா 500 பணப் பரிசு)

★ இரண்டாம் பரிசு - செல்வி.இங்கிதை மெய்யழகன்
யா/ நெல்லியடி மெ:மி.த.க பாடசாலை
(இல.303, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணத்திலுள்ள சிறிமுருகன் தொலைத்தொடர்பகம், முகவர் தபால் நிலைய நிறுவனத்தினரின் ரூபா 300 பணப் பரிசு)

★ மூன்றாம் பரிசு - செல்வி செ.மார்செலோபியோ
யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி இளவாலை
(ஆடியபாதம் வீதி, கல்வியங்காட்டைச் சேர்ந்த அமரர் பரராஜசிங்கம் சுதன் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் ரூபா 200 பணப் பரிசு)

### பொது அறிவுப் போட்டி - இல 07

★ முதலாம் பரிசு - செல்வன் ச.தனஞ்செயன்
யா/இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம்
(இல 303, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள சிறிமுருகன் தொலைத் தொடர்பகம், முகவர் தபால் நிலைய நிறுவனத்தினரின் ரூபா 300 பணப் பரிசு)

★ இரண்டாம் பரிசு - செல்வன் நாகேஸ்வரன் கௌதமன்
யா/ நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.

★ மூன்றாம் பரிசு - செல்வன் தங்கராசா லக்ஷ்மன்
யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்.
(காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்திலிருக்கும் ஆசீர் வணிக நிலையத்தினரின் ரூபா 200, 100 பெறுமதியான பணப்பரிசுகள்)

பரிசு பெறும் அதிஷ்டசாலிகளுக்கு எமது பாராட்டுக்கள். இவர்கள் தங்களை உறுதிப்படுத்தக்கூடிய சான்றினைச் சமர்ப்பித்து ஞாயிறு மற்றும் விடுமுறை நாள் தவிர்ந்த ஏனைய நாட்களில் எமது அலுவலகத்துக்கு வந்து தமது பரிசுக் கூப்பன்களைப் பெற்றுக் கொள்ளவும்.

- பிரதம ஆசிரியர்.

# க.பொ.த உயர்தரப் பரீட்சை அட்டவணை மாற்றம்

| திகதி | நேரம் | பாடம் |
| --- | --- | --- |
| 30-05-2006 செவ்வாய்க்கிழமை | முற்பகல் 9.00 - 12.00<br>பிற்பகல் 13.00 - 16.00 | 72 தமிழ் II<br>24 அளவையியலும் விஞ்ஞான முறையும் II |
| 31-05-2006 புதன்கிழமை | பிற்பகல் 13.00 - 16.00 | 28 மனைப்பொருளியல் II |
| 01-06-2006 வியாழக்கிழமை | பிற்பகல் 13.00 - 16.00 | 29 வணிகக்கல்வி (பழைய) II<br>32 வணிகக்கல்வி (புதிய) II |
| 02-06-2006 வெள்ளிக்கிழமை | முற்பகல் 9.00 - 12.00<br>பிற்பகல் 14.00 - 15.30 | 13 பொது ஆங்கிலம் I<br>13 பொது ஆங்கிலம் II |
| 03-06-2006 சனிக்கிழமை | முற்பகல் 9.00 - 12.00<br><br>பிற்பகல் 13.00 - 16.00 | 10 இணைந்த கணிதம் I<br>25 A வரலாறு (இந்தியா) II<br>25 வரலாறு II<br>12 பொதுச் சாதாரண பரீட்சை |

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# டீசல், பெற்றோல் விநியோகம் இன்று கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம் —

தனியார் வாகனங்களுக்கான டீசல் மற்றும் பெற்றோல் விநியோகம் தொடர்பாக இன்று தீர்மானிக்கப்படவிருப்பதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் அதிகரித்து வரும் எரிபொருட்களின் தட்டுப் பாடு குறித்து யாழ்.அரச அதிபர் இலங்கை மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் பிரதிநிதிகளை அழைத்து நடத்திய கலந்துரையாடல் குறித்து வெளியிட்ட செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலங்கை மின்சார சபை, நீர்விநியோகம், வைத்தியசாலை அம்புலன்ஸ் என்பவற்றுக்குத் தேவையான டீசல் விநியோகிக்கப்படும். தனியார் பஸ்களுக்கான டீசல் இன்று வழங்குவது, அரசாங்க திணைக்கள வாகனங்களின் தேவைகளுக்கு அமைய டீசல் விநியோகிப்பது என்றும் திணைக்களத் தலைவர்களை தங்கள் தேவைகளை தீர்மானிக்குமாறு கோருதல். அத்துடன்-

தனியார் வாகனங்களுக்கு டீசல், பெற்றோல் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் கொழும்பிலிருந்து வரும் டீசல் மற்றும் பெற்றோல் விநியோகம் தொடர்பாக இன்று தீர்மானிப்பது -

அடுத்து வரும் இருவாரங்களுக்கு குறையாது மண்ணெய் இருப்பில் வைத்திருப்பதற்கு ஏற்ற நடவடிக்கையை எடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டதாக அந்தச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தொழில்நுட்பக் கல்லூரியின் காவலாளி சுட்டுக் கொலை!

யாழ்ப்பாணம் —

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்துக்குள் வைத்து அங்கு கடமையில் இருந்த பாதுாப்பு உத்தியோகத்தர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் பால் பண்ணை வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த தங்கராசா கமலலோஜன் (வயது 37) என்பவரே உயிரிழந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் தொழில்நுட்பக் கல்லூரியில் இரவு நேர பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது வளாகத்தில் வைத்தே சுட்டுக்கொல்லப்பட்டார்.

சம்பவம் நடைபெற்ற வேளை படையினரின் நடமாட்டம் அந்தப் பகுதியில் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்ற யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் மரண விசாரணைகளை மேற்கொண்டார்.

பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு நேற்று மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## தாக்குதல்களைத் தவிர்க்கும்படி மகிந்தவுக்கு இந்தியா அழுத்தம்!

கொழும்பு —

இலங்கையில் வன்முறைகள் அதிகரித்துள்ள நிலையில் தாக்குதல்களைத் தவிர்த்து, பொறுமை காக்கும்படி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வுக்கு இந்தியா அழுத்தம் கொடுத்துள்ளதாக புதுடெல்கி செய்திகள் தெரிவித்தன.

அத்துடன், இலங்கை நிலைமைகள் தொடர்பாக நோர்வே அனுசரணையாளர்களையும் இந்திய அரசு தொடர்பு கொண்டு ஆலோசனை நடத்தியது.

அதேவேளை - இலங்கை நிலைமைகள் தொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் நேற்று புதுடெல்கியில் ஆலோசனை நடத்தினார்.

ஜேர்மனி மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு ஐந்து நாள் பயணம் மேற்கொண்டிருந்த மன்மோகன் சிங் நேற்றுக்காலை நாடு திரும்பினார்.

இந்தியா திரும்பிய மன்மோகன் சிங் ஆலோசகர்களுடன் இலங்கை நிலைமைகள் குறித்து விவாதித்தார்.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையேயான நான்கு ஆண்டு கால போர் நிறுத்த ஒப்பந்த முறிவைத் தடுக்கவும், வன்முறைகளைத் தடுக்கவுமான சூழ்நிலைகள் குறித்து மன்மோகன்சிங் ஆலோசனை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தளபதிகளின்...

அரசாங்கத்தின் அனைத்து நிபந்தனைகளையும் விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொள்வார்களா என்பது சந்தேகத்துக்குரியதாகவே உள்ளது.

அனைத்துத்தாக்குதல் நடவடிக்கைகளும் நிறுத்தப்படவேண்டும். மற்றும் பேச்சுக்கான நாட்கள் இறுதி செய்யப்படவேண்டும் என்று அரச தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், கடல்விமானம் சில இடங்களில் இறங்கிச்செல்லும் என்றும் கூறப்பட்டுள்ளது. விமானம் இறங்கிச்செல்லும் இடங்கள் தொடர்பாக விடுதலைப்புலிகள் இணக்கம் தெரிவிக்கமாட்டார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளுடன் ஆலோசனை நடத்தவுள்ளார். அதன் பின்னர் எதிர்காலப்பேச்சுக்கள் குறித்த விபரங்கள் வெளியாகும் என்று அந்தச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருகோணமலை தாக்கு...

சம்பூர், கூனித்தீவு, சூடைக்குடா, இறக்கந்தை, கணே சபுரம், கட்டைபறிச்சான், கடற்கரைச்சேனை, சேனையூர், உப்பாறு, இறால்குழி பிரதேசங்களுக்கு நேரில் சென்று சேத விபரங்களை அவதானித்தார்.

இதன்போது விமானக் குண்டு வீச்சில் முற்றாகச் சேதமடைந்த பல மக்கள் குடியிருப்புக்களையும் அவர் பார்வையிட்டனர்.

இதன்போது கருத்துத் தெதிவிக்கையிலேயே கண்காணிப்புக் குழுத் தலைவர் - தாக்குதல்கள் இலங்கை அரசின் படைகளால் மேற்கொள்ளப்பட்ட அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல் என்று கருத்துத் தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்தரப்பு இவ்வாறு யுத்தநிறுத்த மீறலில் ஈடுபடக் காரணம் என்ன என்று அப்போது கண்காணிப்புக்குழுத் தலைவரரை விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் வினவினார்.

அதற்குப் பதிலளித்த கண்காணிப்புக் குழுத் தலைவர், விடுதலைப் புலிகள் கொழும்பில் மேற்கொண்ட தாக்குதலே அதற்கு காரணம் என்று படைத்தரப்பு கூறுவதாக கூறினார்.

எனினும் முற்று முழுதாக கொழும்பு தாக்குதலை விடுதலைப் புலிகளே மேற்கொண்டனர் என்று தற்போதைய நிலையில் தம்மால் கூற முடியாது என்றும், காரணம் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வேறு குழுக்களும் இயங்குகின்றன என்று தமக்குத் தெரியும் என்றும் கண்காணிப்புக் குழுத் தலைவர் நேற்று கூறினார்.

கண்காணிப்புக் குழுத் தலைவர் நேற்று காலை 9.30 மணிமுதல் 12.30 மணிவரை பாதிக்கப்பட்ட பிரதேசங்களை பார்வையிட்டார். இதற்போது அவருடன் திருகோணமலை மாவட்ட கண்காணிப்புக் குழுத் தலைவர் ஊவே மற்றும் கண்காணிப்புக்குழுத் தலைமையக கண்காணிப்பாளர் ஆகியோரும் உடனிருந்தனர்.

சம்பூரில் வைத்து விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலுடன் இராணுவ பொறுப்பாளர்களான பாஸ்கரன் மற்றும் சுட்டா ஆகியோரும் கண்காணிப்புக் குழுத் தலைவரைச் சந்தித்து பேச்சு நடத்தினர்.

இதேவேளை, செவ்வாய் மற்றும் புதன் ஆகிய தினங்களில் நடைபெற்ற தாக்குதல்களில் காயமுற்ற ஒருவர் நேற்று மரணமாகியுள்ளார். இதனையடுத்து இறந்தவர்களின் எண்ணிக்கை 16 ஆக உயர்ந்துள்ளது.

கண்காணிப்புக் குழுத் தலைவர், மூதூர் பழைய இறங்குதுறையை அண்மித்த வட்டம் பிரதேசத்துக்கும் சென்று விமானக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட முஸ்லிம் குடும்பத்தவர்களையும், காயமடைந்தவர்களின் உறவினர்களையும் நேரில் சந்தித்து உரையாடினார்.

இதன்போது - புதன்மாலை மேற்கொள்ளப்பட்ட விமானக்குண்டு வீச்சின்போது முஸ்லிம் சமூகத்தவர்களும் கொல்லப்பட்டனர் என்பதை அவர்களது உறவினர்களிடமிருந்து கண்காணிப்புக்குழுத் தலைவர் அறிந்து கொண்டார்.

## பரீட்சை முடிவுகள் இன்று வெளியீடு

கொழும்பு —

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையின் 2005 ஆம் ஆண்டுக்கான முடிவுகளை இன்று முதல் இணையதளத்தில் பார்வையிடலாம் என பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்தார்.

இந்த முடிவுகளை WWW.donets.lk என்ற இணையத்தள முகவரியில் பார்வையிடமுடியும்.

இதேவேளை, பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான பெறுபேறுகள் நாளை பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான பெறுபேறுகள் பின்னர் வெளியிடப்படவுள்ளன.

## எரிபொருள்...

தரைவழி எரிபொருள் விநியோகம் தடைப்பட்டது. எனவே, எரிபொருள் நிரப்பிய பவுசர்கள் ஓமந்தையில் தரித்து நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்வாறு தரித்துநின்ற பவுசர்கள் நேற்று ஏ9 வீதி மீண்டும் திறக்கப்பட்டதால் குடாநாட்டுக்கு வர ஆரம்பித்தன. இன்று அவை குடாநாட்டுக்கு வந்ததும், எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகம் செய்யப்படும்.

இன்று எரிபொருள் விற்பனை நிலையங்களில் பாவனையாளர்கள் பெற்றோல் உள்ளிட்ட எரிபொருட்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்குமெனவும் கூட்டுத்தாபன வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ரி)

## தட்டாதெரு...

இதன்போது இரண்டு படையினர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லும் வழியிலேயே ஒருவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னர் தட்டாதெருச்சந்தியில் படையினர் தொடர்ந்து 20 நிமிடம் வரை துப்பாக்கிச்சூடு நடத்தினர். எனினும், எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

## கொகன்ன...

ராஜபக்ஷ நேற்று சந்தித்துப் பேசினார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில்- இலங்கையின் அண்மைய நிலைமைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் மகிந்தவின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சுச் செயலாளர் பாலிக ஹார மற்றும் சமாதான செயலக பணிப்பாளர் பாலித கொகன்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஊர்காவற்...

கோட்டைம்பர தளத்தில் இருந்து காரை நகரில் உள்ள எலார கடற்படைத் தளத்துக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த கடற்படையினர் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இராணுவச் சந்தியில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் இரு கடற்படையினரும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். பெற்றி ஒவ்விசர் யசரத்ன மற்றும் குணசிங்க ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து ஊர்காவற்துறைப் பகுதியில் பதற்றநிலை காணப்பட்டது.

## துப்பாக்கிச் சூட்டில் பழவியாபாரி காயம்

வவுனியா —

வவுனியா நகர மத்தியில் பழவியாபாரி ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களால் சுடப்பட்டு படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில்- வவுனியாவைச்சேர்ந்த நல்லதம்பி ஜெகதீஸ்வரன் என்பவரே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

தனது வர்த்தக நிலையத்தில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள் மேற்கொண்டதுப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்தார்.

## மன்னாரில் இரு தாக்கு...

சிகிச்சையளிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக விசேட அதிரடிப்படையின் அம்புலன்ஸில் வாகனத்தில் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதேவேளை, நேற்று மாலை நானாட்டான் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு கிளைமோர் தாக்குதலில் 3 படையினர் உயிரிழந்தனர். மேலும் 3 பேர் படுகாயமடைந்தனர்.

நானாட்டான்-வங்காலை வீதியில் நறுவிலிக்குளம் கிராமத்தில் திருவபுரி எனும் இடத்தில் குளத்தில் குளிக்கச்சென்ற படையினர் மீது நேற்று மாலை 4.30 மணியளவில் கிளைமோர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தாக்குதலை அடுத்து அந்தப்பகுதியில் சுமார் 15 நிமிடங்கள் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தைத் தொடர்ந்து சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய படையினர்- அந்த வீதியூடாக பயணம் செய்தவர்களை கடுமையாகத் தாக்கி காயப்படுத்தியதாக தெரியவருகிறது.

இந்தச் சம்பவங்களையடுத்து வங்காலை-நானாட்டான் வீதியூடான போக்குவரத்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (மோ)

## அரசின் போர்ப் பிரகட...

இடம் பெயர்ந்துள்ளனர்.

மட்டக்களப்பு வவுணதீவிலம் இராணுவம் ஆட்லறித் தாக்குதலை நடத்தி வருகிறது. மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக சீர்குலைக்கப்பட்டுள்ளது.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்திற்கமைய திறக்கப்பட்ட தமிழர்களுக்கான போக்குவரத்துப் பாதைகளை திடீரென அரசாங்கம் எவ்வித முன்னறிவிப்புமின்றி மூடியுள்ளது. இது மக்களின் இயல்பு வாழ்க்கையை உருவாக்குதல் தொடர்பான அரசாங்கத்தின் பாரிய யுத்த நிறுத்த மீறலாகும்.

இதர பகுதிகளுக்கு பணிநிமித்தம் தமிழர்கள் இதனால் வீடுகளுக்குத் திரும்பமுடியாத நிலை உள்ளது.

இத்தகைய சூழ்நிலையால் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் நிரந்தர அச்சத்துடன் உள்ளனர்.

வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும் நேற்றுமுன்தினம் இரு பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இராணுவ கட்டுப்பாட்டில் அரசாங்கத்தால் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதன் தொடர்ச்சி இது.

ஒட்டுமொத்த தமிழர் தாயகத்திலும் பயங்கரமான, அச்சகரமான சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இன்று. எமது அமைப்பிடமிருந்து தமிழ் மக்கள் பாதுகாப்பு கோரி - எதிர்பார்த்து நிற்கின்றனர்.

பகிரங்கமாக அரசாங்கம் போர்ப் பிரகடனம் செய்து தமிழ் மக்களை படுகொலை செய்துவரும் நிலையில், சர்வதேச சமூகம் கண்ணை மூடிக் கொண்டுள்ளது. அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாட்டை சர்வதேச சமூகம் கண்டிக்கத் தவறிவிட்டது. அரசாங்கத்துக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுத்து இத்தகைய நடவடிக்கைகளைத் தடுக்கத் தவறிவிட்டது.

இது எமக்கும் எமது தமிழ் மக்களுக்கும் அதிர்ச்சியையும், கவலையையும் அளிக்கிறது.

தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலையை அரச பயங்கரவாதத் தாக்குதல்களை சர்வதேச சமூகம் வன்மையாகக் கண்டிக்கவேண்டும் என்று வேண்டுகிறோம்.

சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை அரசாங்கம் சீர்குலைக்க முயற்சிப்பதையும் தமிழ் மக்களும் தமிழீழ விடுதலைப் புலிகளும் போர்ச் சூழலுக்குள் தள்ளப்பட்டிருப்பதையும் சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளும் என்ற நம்பிக்கை உள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## மரண அறிவித்தல்

### தங்கராசா கமலலோஜன்

(பாதுகாப்பு உத்தியோகத்தர், தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில்)

இல.115 பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும் - யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியின் பாதுகாப்பு உத்தியோகத்தருமான தங்கராசா கமலலோஜன் 26.04.2006 அன்று புதன்கிழமை இரவு அகாலமரணமானார்.

அன்னார் தங்கராசா - செங்கமலம் ஆகியோரின் கனிஷ்டபுத்திரனும், சுகந்தினியின் அன்புக் கணவரும், மட்டுவில் தெற்கு கனகலிங்கம் நல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், பாலகிருஷ்ணன், சறோஜாதேவி, றஞ்சனாதேவி, விவேகானந்தராசா, விஜயலோஜன் (லண்டன்), றஜீனலோஜன் (மாணவன், யாழ்.உயர்தொழில்நுட்பக் கல்லூரி - H.N.D.A 4ஆம் வருடம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் - மங்களேஸ்வரன் (தவம், சுவிஸ்), கஜேந்திரன் (ரூபன், சுவிஸ்), காண்டீபன் (இ.போ.ச), திவாகர் (மாணவன், உயர்தரம் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஆகியோரின் அன்பு மைத்துனரும் -

குகந்தி (சுவிஸ்), பாமினி (சுவிஸ்), ராகினி (தங்கா), ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், சந்திரன், காங்கேஸ்வரி, சிவனேஸ்வரன், ஜீவா, லோகினி (லண்டன்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 28.04.2006 அவரது இல்லத்தில் நடைபெற்று பகல் 1 மணிக்கு பூதவுடல் கட்டையாள் அடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல் :*
த.றஜீனலோஜன் (சகோதரன்)
(யாழ்.உயர்தொழில்நுட்பக் கல்லூரி)

(சி/5302)


...பத்திரிகை இல.267 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28..04.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.